# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு சித்திரை மாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 14-ம் இலக்கம்


## வத்திக்கான் இராச்சியம்

உலகிலேயே மிகச்சிறிய நாடுகளில்ஒன்ருன வத்திக்கான் இராச்சியமானது எட்டாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் மூன்ரும்முடியப்பர்என்னும் பாப்பானவரின் காலத்தில்தான் ஜேர்மனிய சக்கிரவர்த்தியாக விளங்கிய பெப்பின்என்பவரால் தோற்றுவிக்கப் பட்டதாகும். அர்ச். இராயப்பரின் பிதுரார்ச்சிதம்என்று அழைக்கப்பட்ட இந்தப்பிரதேசங்களுடன், பிற்காலத்தில்வந்த ஷாமர்லேன் போன்ற கத்தோலிக்க சக்கிரவர்த்திகள் மேலும்பலபகுதிகளைச் சேர்க்கவே 16-ம்நூற்ருண்டிற்குள் மத்தியஇத்தாலிமுழுவதும் பாப்புமாரின் ஆளுகையின் கீழ் வந்தது. இடையிடையே ஏற்பட்ட எண்ணிலாத இன்னல்களின்மத்தியிலும் 17-ம்நூற்ருண்டுவரை பாப்புமார் தங்கள் இராசியஅதிகாரத்தை விடாது காப்பாற்றிவந்தனர்.

ஆயினும், 17-ம்நூற்ருண்டில் இத்தாலியில் ஏற்பட்ட அரசியற் புரட்சிகளின்விளைவாகப் பாப்புமாரின் பிரதேசங்கள் பறிக்கப்பட்டுக் கடைசியில் 1929-இல்தான் 11-ம்பத்திநாதர் காலத்தில் அவருக்கும், அப்போதைய இத்தாலியபிரதமராய் விளங்கிய முசோலினிக்குமிடையே நடைபெற்ற லத்தறன்ஒப்பந்தத்தின்படி வத்திக்கான்அரண்மனையைச் சார்ந்த பிரதேசங்கள் திரும்பக் கொடுக்கப்பட்டன. அதேஒப்பந்தம் வத்திக்கான்இராச்சியத்தின் சுதந்திரத்தையு,ம்தனித்தியங்கும் உரிமையையும்உறுதிப்படுத்தியது. அதுமுதற்கொண்டு வத்திக்கான்இராச்சியமானது பாப்புமாரின்ஆளுகையின்கீழ் தனித்தியங்கும் தனியரசாக விளங்கிவருகிறது.

வத்திக்கான்இராச்சியமானது ரோமைமாநகரின் இதயஸ்தானத்தில் அமைந்திருக்கிறது. வத்திக்கான்மாளிகையும், புனிதஇராயப்பர் மகாதேவாலயமுமே இவ்வரசின் பிரதானஸ்தாபனங்களாகும். அநேகமுறை இம்மாளிகைபுதுப்பிக்கப்பட்டும், கட்டப்பட்டும் வந்திருக்கிறது. மேலும் இவ்வரண்மனையானது 1,000 அறைகளைக்கொண்டதாக விளங்கியபோதிலும்சுமார்200மட்டுமே வசிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. மற்றவைகள் யாவும் பழம்பெரும்வரலாற்றுச் சுவடிகள்போன்ற பொருட்களைக் கொண்ட காட்சியறைகளாக விளங்கிவருகின்றன. இவ்வரண்மனையில் உள்ள பல்வேறுசிற்ருலயங்களில் 4-வதுசிக்துஸ்என்னும் பாப்பானவரால் கட்டப்பட்ட சிக்ஸ்ரைன்சிற்ருலயமே மிகவும்முக்கியமானதாகும். இங்குதான் பாப்புமாரின்தேர்தல் நடைபெறுகிறது. இவ்வரண்மனையிலுள்ள மாபெரும் நூலகமானது உலகின் தலைசிறந்த நூலகங்களுள்ஒன்ருக மதிக்கப்பட்டுவருகின்றது. மேலும், சுமார்80மொழிகளில் அச்சிடும் வசதிபெற்ற நவீனஅச்சகமும், மார்க்கோனியாலேயே ஸ்தாபிக்கப்பட்ட தலைசிறந்த வாஞெலி நிலையமும், சுமார்18,000 சதுரகஜங்கள் பரப்பளவுள்ள புனித இராயப்பர்மகாதேவாலயமும் இங்குதான்உள்ளது.

இப்போதைய வத்திக்கான் இராச்சியத்தின் மொத்தப்பரப்பளவு 109ஏக்கரே. இதன்,றியும், ரோமைநகரிலிருக்கும் பல்வேறு 13கட்டடங்களும் இவ்விராச்சியத்தில் அடங்கியனவாகும். ஆளும்பாப்பானவரே இந்த இராச்சியத்தின் தலைவர்ஆவார். ஆட்சிமுறை, நீதிவழங்கல் போன்ற பொறுப்புகள் அவரையேசார்ந்ததாகும். அரசாங்கமானது ஒருதலைவரைக்கொண்ட சிலகருதிஞல் மார்குழுவிஞல் நிர்வகிக்கப்படுகிறது. சட்டங்களோ திருச்சபைச்சட்டங்களையொட்டி இயற்றப்பட்டவை. இச்சட்டங்கள் செல்லாதஇடங்களிலே ரோமைநகரின்சட்டங்கள் நடைமுறையிலிருக்கும். அகில உலகரீதியில் இந்தநாடு நடுநிலைமை வகித்துவருகிறது.

இதன்சனத்தொகை 1,000 பேர்ஆகும். இவர்களில்பெரும்பாலாஞேர் திருச்சபைஅதிகாரிகளே. மற்றவர்கள் வத்திக்கான் ஊழியர்களும், அவர்களின்குடும்பத்தினருமாகும். பிரசைகள் யாவரும் இஷ்டபிரசைகளே யாவர். நினைத்தால் வத்திக்கானை விட்டு வெளியேறிவசிக்கலாம். இங்குவரிகள்கிடையா.

இதற்கெனப்பிரத்தியேகதபால், தந்தி, தொலைபேசிப் பகுதிகள் உண்டு. சொந்தமாக நாணயங்களும், தபால்முத்திரைகளும், இதுவெளியிடுகின்றது. 600அடி நீளமுள்ள இரட்டைறெயில் பாதையொன்று அருகாமையிலுள்ள இத்தாலிய றெயில்நிலையத்திலிருந்து வத்திக்கான்தோட்டம்வரைக்கும் செல்லுகிறது.

இந்தநாடு கம்யூனிஸ்தநாடுகள் தவிர மற்றநாடுகள் யாவற்றுடனும் அதாவது—ஏறக்குறைய 60 நாடுகளோடு அரசியல் உறவு கொண்டுள்ளது. உருவத்தில் சிறிதாயினும் வத்திக்கானின் பெருமையும், சலுகையும் உலகில் பெரும்அளவில் பெருகியுள்ளது. அகிலஉலகமும் இதன்வலிமை வாய்ந்த ஆன்மீகசக்திக்குமுன் அடிபணிந்து உலகவிவகாரங்களிலும், மற்றும் சமூகபிரச்சினைகளிலும் அதன்ஆலோசனையைக் கேட்டுநடப்பதில் பெருமைகொண்டுள்ளது.

சமீபத்தில்காலஞ்சென்ற 12-ம் பத்திநாதருக்கு உலகம்அளித்த புகழுரைகளும், புதியபாப்பரசருக்குஅளித்த பெருவாரியான நன்மதிப்புமே வத்திக்கான் இராச்சியம் உலகின்கண்களுக்கு எத்துணைபெருமிதமாகக் காட்சியளிக்கின்றதென்பதற்குத் தகுந்த சாட்சியாகும்.

—முன்னேடி.

## அர்ச். சூசையப்பரின் சிறியநாய் அந்திரே பிறதர்

[இஃது சஞ்சூசையப்பர்சபைச் சந்நியாசர்களில் ஒருவராயிருந்து காலஞ்சென்ற சங். பி. இஞ்ஞாசிமுத்து, S. S. J. பிறதர்அவர்களால் தமிழாக்கஞ் செய்யப்பெற்றது.]

(தொடர்ச்சி)

அந்திரேபிறதரோ மற்றைப் பிணியாளரைப் பற்றியஅலுவலிலே முயற்சியாய்நிற்க, ஒருவன் முன்வந்து, "எனது வலதுகை திமிர்வாதத்திஞலே மரத்து ஆட்டஅசைக்கக் கூடாதிருக்கின்றது" என்ருன். "முதற் போய்ப் பாவசங்கீர்த்தனம் பண்ணு; பின்நவநாட்செபந் தொடக்குவாயாக" என்ருர் பிறதர். அவன், "பிறதரே! நான் இருபத்தைந்து ஆண்டுகளாய்ப் பாவசங்கீர்த்தனம் பண்ணியறியேனே" என்ருன். பக்கலிலே நின்றமகள், "பப்பா! சுற்றிநிற்கிற சனம் நீங்கள் சொல்லுகிறதைக் கேட்டுக்கொண்டு நிற்கிருர்களே" என்ருள். "அவ்வளவு காலமாய்ப் பாவசங்கீர்த்தனஞ்செய்ய அலட்சியம் செய்துவந்தநான் அதைத் தைரியமாய் ஒப்புக்கொண்டு வெளிப்படுத்த வெட்கப்படுவானேன்" என்ருன் பெற்றபிதா. பிறதர் அவனுடைய நன்மனதை மட்டிட்டறிந்துகொண்டு, "உன் வலக்கையாலே உன்தொப்பியை எடுத்து உன்தலையிலே போட்டுக் கொள்"என, அவன் திமிர்வாதந் தீர்ந்தவனுய் அற்பநோவு வில்லங்கமின்றி அவர் சொல்லியபடி செய்தான். "நல்லது. இரவைக்கு இக்கோவிலுக்குவந்து இங்குள்ளதோர் அறையிலே உறங்குவாயாக; நாளைக்காலை திவ்விய நன்மை உட்கொள்வாயாக"என்ருர். அற்புதமாய்க் குணப்பட்டவன் அவ்விதம் செய்வதாக வாக்கிட்டுப்போய்விட சூழநின்றவர்களில் ஒருவன் பிறதரைப் பார்த்து: "போனவன் போனவன்தானே, இனிவருவான்என்று நம்புகிறீரோ?" என்ருன். "கட்டாயம்வருவான்" என்ருர் பிறதர். அவன் தான் வாக்கிட்டபடியே வந்து பாவசங்கீர்த்தனஞ்செய்து திவ்வியநன்மையும்பெற்றுச் சரீரசுகத்தோடு ஆத்துமசுகமும் அடைந்து ஞானமகிழ்ச்சியிஞலே இருதயம் பூரிக்கலாஞன்.

சூசையப்பர் சிற்ருலயம் அல்லது செபக்கூடத்திலே பிற்பகல் மூன்றுமணிக்குத் தேவாராதனை தொடங்கி நடைபெறுவதுவழக்கம். அந்திரேபிறதர் அதற்குப் போய்க்கொண்டிருக்கும்போது, அவருடைய சிநேகிதருள்ஒருவன் ஆத்திரமாய்வந்து "பிறதர் ஒரு அவசியமானகருமம்" என்ருன். "கோவில்ஆராதனை முடிந்தபின்வா" என்ருர் பிறதர். அவன் "எனது கொழுந்தியார் ஆபத்தான வருத்தமாய்க்கிடக்கிருள்"என்ருன். "அவள் நல்ல சுகமாயிருக்கிருள்" என்று சொல்லிவிட்டுப் பிறதர்நில்லாமல் நடந்துசெல்ல, "ஐயோ பிறதரே, நான் சொல்லியதை நீர்விளங்கவில்லையாக்கும்; உயிர்விடும் தருவாயிலே இருக்கிருளே" என்ருன். பிறதர் மறுமொழியாதுஞ் சொல்லாது தம்வழியே போய்விட்டார். கொழுந்தியார்பாடு முடிந்திருக்க வேண்டுமென்று அவன் எண்ணமிட்டுக்கொண்டிருந்த அடுத்ததினமன்று அவள் தாஞகவே "நேற்றுப்பிற்பகல், இரண்டேமுக்காலுக்கும் மூன்றுக்கும் இடையிலே நான் சட்டெனச் சுகப்பட்டுவிட்டேன்" என்று அவனுக்குத் தெலிபோன் செய்தியனுப்பிச் சூசையப்பர் செபக்கூடத்துக்குப் புறப்பட்டு வருவதாகவும் தெரிவித்துவிட்டாள்.

சிலருக்கு அந்திரேபிறதரைக் கண்ட மாத்திரத்திலே நெடுநாள் அகலாதபிணி அகன்றதும் உண்டு. சயரோகத்திஞலே உருக்குலைந்து அவகோலமாகி

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# நமது ஆண்டவரின் திருமுகச் சாயல்

நமது ஆண்டவர் சிலுவை சுமந்துகொண்டு கல்வாரி மலையைநோக்கிச் சென்றபோது அவருடைய திருமுகத்தைத் துடைத்த அர்ச். வெரோணிக்கம்மாள் யூதேயா நாட்டின் பாரம்பரியத்திற்கிணங்க அர்ச். சுவக்கினுடைய சகோதரன் மகள். ஆதலால் பரிசுத்ததேவதாயாரும், இந்த அர்ச்சியசிட்டவளும் நமது நாட்டில் சொல்வது போல் சகோதரிகள். திவ்வியயேசுவைப்பின்பற்றிய புண்ணியஸ்திரீகள் கூட்டத்தில் அர்ச். வெரோணிக்கம்மாளும் சேர்ந்தவள். ஆண்டவர் சிலுவை சுமந்துகொண்டு போகும்போது அவருடையதிருமுகம் அசுத்தஉமிழ்நீரால் கறைபிடித்து வியர்வைவடிகிறதைக் கண்டு இந்தப்புண்ணிய ஆத்துமம் சொல்லொண்ணாத்துயருற்று ஆண்டவருடைய திருமுகத்தைத்துடைக்க ஓர் வஸ்திரத்தை எடுத்துக்கொண்டு அவருக்குண்டான களைப்புத்தீரத்தக்கதாய் ஏதேனும்குடிக்கக் கொடுக்கலாமெனும் எண்ணத்தோடு ஒருபையனிடம் ஓர்பாத்திரத்திற் கொஞ்சம்இரசமுங்கொடுத்து அழைத்துக்கொண்டு போகும்போது, சேவகரும் சனக்கூட்டமும் அந்தப்பையனைப் போகவிடாது அர்ச். வெரோணிக்கம்மாளுக்கு மாத்திரம் போக அனுமதி கொடுத்தார்கள். ஆண்டவர் இருந்த பரிதாபத்துக்குரிய நிலைமையை அவள்கண்டு மிகுந்த அழுகைப் பிரலாபத்தோடு ஒருவஸ்திரத்தைக்கொண்டு அவருடைய திருமுகத்தைத் துடைத்தாள். பின்னர் தன்வீடு போய்ச்சேர்ந்ததும் இந்தவஸ்திரத்தை தை விரித்துப்பார்த்தாள். மூன்று மடிப்பாய்மடித்திருந்த இந்தப்பரிவட்டத்தில் ஒவ்வொருமடிப்பிலும் ஆண்டவருடையதிருமுகம் அற்புதமாய்ப் பதிந்திருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டாள். மேலும் ஆண்டவர் மரித்தபின் அர்ச்சியசிட்டவள் இந்தப்பரிவட்டத்தை அநேக வியாதிக்காரர்கள்மேல் வைத்ததும் அவர்கள் எல்லோருக்கும் அற்புதமாகச் சௌக்கியங்கிடைத்தது.

உரோமாபுரியின் சக்கிரவர்த்தியாகிய திபேரியுஸ்என்பவன் தீராதவியாதிகண்டு எந்தவைத்தியம் செய்வித்தும் சௌக்கியமாகாமல், யூதேயாநாட்டிலே யேசுவென்னும்ஒருவர் பெரியபுதுமைகள் செய்கிறாரென்று கேள்விப்பட்டு, அவரைக்கட்டாயமாய் அழைத்துவரத் தன் உத்தியோகஸ்தர்களை அனுப்பினான். அவர்கள் யூதேயாநாடு சென்று விசாரித்தபோது யேசுஎன்பவர் சிலுவையில்அறையுண்டு இறந்துபோனாரென்று சொல்லக்கேட்டுத் திரும்பிவந்து சக்கிரவர்த்தியிடம் சங்கதியை அறிவித்தார்கள். அதேசமயத்தில் யூதேயாநாட்டில் ஆண்டவருடைய திருமுகப்பரிவட்டத்தால் நடக்கும் அற்புதங்களும் அரசனுடைய செவிக்கெட்டியது. உடனே தானே தன்இராணுவ உத்தியோகஸ்தர்சிலரை அனுப்பி அர்ச். வெரோணிக்கம்மாளைக் கையோடு அழைத்துவரக் கேட்டுக்கொண்டான். உரோமாபுரிக்கும், யூதேயாநாட்டுக்கும் வெகுதூரமென்பதிற் சந்தேகமில்லை. என்றாலும் அர்ச்சியசிட்டவள் சம்மதித்து ரோமாபுரிசென்று, திபேரியுஸ்இருந்த அரண்மனையை அடைந்து அவன் வியாதியாய்ப்படுத்திருந்த அறைக்குப்போய் ஆண்டவருடைய திருமுகப்பரிவட்டத்தை அவனுடையசரீரத்தின்மேல்வைத்தாள். வைத்ததும் உடனே அவனுக்குப் பூரணசௌக்கியம்வந்தது. அங்கு நின்றவர்களும், அவனும் ஆண்டவருடைய வல்லமையைக்கண்டு பிரமிப்படைந்தார்கள். இம்மாத்திரம் நன்மைசெய்கிற இந்த யேசுவைத் தன் கோழைத்தனத்தால் சிலுவைமரணத்துக்குக்கையளித்த பிலாத்துவைச் சக்கிரவர்த்தி உடனே அதிகாரத்தினின்று நீக்கி, அவனை அந்நியதேசத்துக்குப் பரதேசியாக அனுப்பிவிட்டான்.

அர்ச்சியசிட்டவள் இந்தத்திருமுகப் பரிவட்டத்தை அப்போது அர்ச். இராயப்பருக்குப்பின் திருச்சபையை ஆண்டுவந்த அர்ச். சாந்தப்பர்என்னும் பாப்பானவரிடம் கொண்டுபோய்க் கொடுக்கவே அவர் அதைவெகுபூச்சியத்தோடு ஓர்விலையுயர்ந்த பேழையில் வைத்துக் காபந்துபண்ணினார். இந்தப் பரிசுத்த பரிவட்டத்தின்மட்டிலே விசுவாசிகளிடத்தில் விளங்கவேண்டிய பூச்சியதையினிமித்தம் இந்தச்சாயலான எந்தப்படமும் அச்சிடக்கூடாதென்றும், அச்சிட்டால் திருச்சபைக்குப் புறம்பாக்கப்படுவார்களென்றும் பரிசுத்தபிதா கட்டளையிட்டிருந்தார். ஆனால், காளாவட்டத்தில் இந்தக்கண்டிப்பான கட்டளையைப் பின்வந்த பாப்புமார்கள் பையமெல்ல நீக்கிவிட்டார்கள். கடைசியாகச் சென்றநூற்றாண்டின் நடுக்கூற்றிலேதான் திருமுகப்பக்தியானது திருச்சபைமுழுவதும் பிரபல்யமாய்ப் பரவிற்று.

பிரான்ஸ்தேசத்திலே தூரென்னும் பட்டணத்துக் கார்மேல்மடத்துக் கன்னிகாஸ்திரிமார்களில் ஒருவருக்கு நமது திவ்விய இரட்சகர் 1840-ம் ஆண்டில் ஓர் நாள் தாம்கல்வாரிமலையில் ஏறும்போது எவ்வளவுபரிதாபத்துக்குரிய ஸ்திதியிலிருந்தாரோ அதே ஸ்திதியில்தம்மைக்காண்பித்துத் தமது திருப்பாடுகளின்போதும், அதன்மேலும் சகலபாவிகளாலும் தமக்குவருகிற நிந்தைஅவமானங்களை ஞாபகப்படுத்தி, "பாவஉமிழ்நீரால் அசுத்தமான தமது திருமுகத்தைத் துடைத்துப் பரிகாரஞ்செய்து, அதற்குச்சங்கைபுரிய அர்ச். வெரோணிக்கம்மாளை ஒத்த சிலபுண்ணியஸ்திரீகளைத் தேடுகிறோம்" என்றுமுறையிட்டார்.

இதுவிஷயத்தை மேற்படி கன்னியாஸ்திரி மற்றவர்களுக்கு வெளியிட்டதும், அந்தப்பட்டணத்தில் உத்தமகிறீஸ்துவரான தூப்போன் என்பவர் இந்தப்பக்தியைவிர்த்திசெய்வதற்காகத் தமது பணத்தையும், பிரயாசையையும் கவனியாமல், தமதுவீட்டின் ஓர்பக்கத்தில் வெகுபயபக்தியோடு திருமுகப் படம்ஒன்றை ஸ்தாபித்து அதற்குமுன்பாக ஓர்தீபமும் இராப்பகலாய் எரியும்படிசெய்தார். இதையறிந்த அநேக விசுவாசிகள் இந்த ஸ்தலத்தைச்சந்திக்கவந்ததோடுகூட, வியாதிக்காரர்கள் பேரில் இந்த எண்ணெயைத்தொட்டுத் தடவியபோது அநேகம்பேர் சௌக்கியமுமடைந்தார்கள். சிலகாலத்துக்குப்பின்னர் இந்தவீடு ஒருகோவிலாக ஏற்படவே, இந்தப்பட்டணத்து மேற்றிராணியாண்டவர் "திருமுகச்சபை" என்னும் ஓர்சபையையும் ஸ்தாபித்தார், இந்தச்சபை 1885-ம்ஆண்டு பரிசுத்தபிதா பதின்மூன்றாஞ்சிங்கராயப் பாப்பானவரால் ஓர்மகாசபையாக ஏற்படுத்தப்பட்டது. கடைசியாய் இந்தப் பக்தியானது உலகமெத்திசையிலும் பரவி அநேக வியாதிஸ்தர்களுக்குப் புதுமையாக ஆரோக்கியம் கொடுத்ததுடன் ஆத்துமஈடேற்றத்துக்கு அவசியமான இஷ்டப்பிரசாதங்களையும் ஏராளமாய்ப் பிறப்பித்தது.

---

● ஆர்ஜென்டீனாநாட்டிலே ஓர்பிரபல சித்திரகாரனை பீலிக்ஸ் பலியன் என்பவர் எண்ணெய்வர்ணங்கொண்டு தீட்டிய 12-ம்பத்திநாத பாப்பானவரின் பிரதிமைப்படம்ஒன்றைச் சமீபத்திலே அருளப்பபாப்பரசருக்குச் சமர்ப்பித்திருக்கின்றார். இந்தப்பிரதிமையை இவர் விஸ்தாரித்துமுடிக்க இரண்டுவருடங்கள் பிடித்தனவாம்.

# பொது வர்த்தமானம்

### வைகாசி 3-ந்திகதி

புதியபாப்பரசரின் ஆளுகைகாலத்திலே இரண்டாவதாக மரியே துபுறுஸ் டி'யூவில்தாயார் அடுத்தவைகாசிமாதம் 3-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுவார். மொன்றியல்நகரிலிருந்து சிலமைல் தூரத்திலுள்ள லாறென்னெஸ் என்னுமிடத்தில் பிறந்தஇவர் கனடாவிலே 1771-ம்ஆண்டு "கிறேனஸ்" என அறியப்படுகின்ற பிறர்சிநேக கன்னியர்சபையை அடியிட்டார். ஏழைகள்மத்தியிலே தொண்டாற்றுதற்கென்று தனது சபையை அடியிட்டபோது இவர் ஓர் விதவையாய் இருந்தார். இச்சபைக் கன்னியராய்ச் சுமார் 7,000 பேர் தற்போது அமெரிக்காவின் பல்வேறுநாடுகளிலும், கிழக்கிந்தியதீவுகளிலும், ஜப்பானிலும் தொண்டாற்றிவருகிறார்கள்.

* * *

### சீனுவின் உட்கருத்து என்ன ?

"சீனுவுக்கு இந்தியாமீதே கண் இருந்துகொண்டிருக்கிறது. முதலில் இந்தியாவைக் கைப்பற்றியபின் ஆசியாக்கண்டம்முழுவதிலும் தனது ஆதிக்கத்தைப் பரப்புவதே சீனுவின்நோக்கம்; கம்யூனிஸ்தர்களின் உத்தேசம் என்னவென்றால், முதல்இந்தியாவுக்கு வந்து பின்னர்இந்தியாவைக் கைப்பற்றுவது; இறுதியில் ஆசியாவையே தங்கள் ஆட்சியின்கீழ் கொண்டுவருவது; அவர்கள் திபேத்தைப் பிடித்தமையால் திறப்பை எடுத்துக்கொண்டார்கள்; இதனால் மற்றக்கதவுகளைத்திறப்பது இலகுவாகிவிடும்; திபேத்தியமக்கள் விடுதலைப்போராட்டத்தில் இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள்; தங்கள்சுதந்திரத்தைப் பாதுகாக்க எல்லாநாடுகளினதும்உதவியை அவர்கள் நாடிநிற்கின்றார்கள்; சீனர்களைஎதிர்த்துப் போராட்டம் இறுதிவரை நடந்தேதீரும்" என்று தற்சமயம் நியூயோர்க்நகரிலே கல்விபயின்றுவருகிறவரும், தலாய்லாமாவின் மூத்தசகோதரருமான திரு. துப்டென் நோர்பு வாஷிங்ரன் நகரில் அளித்தபேட்டிஒன்றிலே தெரிவித்திருக்கின்றார்.

### அணுஆயுதங்களைப் பிரயோகிக்குமா ?

நேசநாடுகளின் பிரதமசேனாபதியான ஜெனறல்லோறிஸ் நோர்ஸ்டட் அவர்களிடம் சென்ற 7-ந்திகதி வாஷிங்டன் நகரிலே சனப்பிரதிநிதிகள்சபையின் வரவுசெலவுத்திட்ட உபகம்மிற்றியின் இரகசியமகாநாட்டில் ஓர் கேள்வி பொறிக்கப்பட்டது. அதாவது மேற்கு ஐரோப்பாவிலே சிறியஅளவில் ஓர்யுத்தம்மூண்டால் அதில்ஈடுபடும்இருபகுதியினரும் அணுக்குண்டுப்படைகளை உபயோகிக்காதபோதிலும் 'நேற்றோ'என அறியப்படும் வடஅத்திலாந்திக் ஒப்பந்தநாடுகளின் படைகளால் மேற்கு ஐரோப்பாவைப் பாதுகாக்கமுடியுமா? என்பதே. அவர் இதற்குஅளித்தபதிலில், 'நேற்றோ' நாடுகளின்படைகள் அணுஆயுதங்களையே நம்பியிருக்கின்றன; வழமையான ஆயுதங்களை மட்டும் நாம்கொண்டிருக்கவில்லை; நேசநாடுகளின்படைகள் அணுஆயுதங்களைக்கொண்டும், நவீனமாதிரியான கருவிகளைக்கொண்டும்தாக்குதலைநடத்தக்கூடிய நிலையில்இருக்கின்றன; நான் ஒன்றுமட்டும் கூறவிரும்புகிறேன்; ஐரோப்பாவில் முக்கியபிரச்சினையாதும் எழுமேயாகில் அதைச் சமாளித்துக்கொள்ள நேசநாடுகளின் இராணுவபடைகள் அணுஆயுதங்களை உபயோகியாமலிருக்கமுடியாது" எனக்கூறியிருக்கின்றார். பிறகு, ஐரோப்பாவிலுள்ள அமெரிக்கபடைகளின் பிரதமசேனாபதியான ஜெனறல்ஹென்றி ஹோட்ன் அவர்கள் பேசியபோது, "ஐரோப்பாவிலே அமெரிக்கப்படைகள் மிகவும்பலமானநிலையில் இருக்கின்றன; சோவியற்ருஷியாவின் ஆக்கிரமிப்புகளுக்கு இடங்கொடாதவகையில் அவைகள் இருக்கின்றன; ஜேர்மன் இராணுவப்படைகளும் முன்னேறிவருகின்றன; கிழக்குஜேர்மனியைவிட்டு ருஷியபடைகள் அவசரநேரத்தில் வேறிடம்செல்லுமென நான்நம்பவில்லை; ஜேர்மன்மக்களிலே ருஷியர்களுக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை" எனக் கூறினார்.

### "தேன்மதிகாலம் மறைந்துவிட்டது"

"சீனுவுக்கும், இந்தியாவுக்குமிடையே நிலவிவந்த தேன்மதிகாலம் மறைந்துவிட்டது; திபேத்துநெருக்கடி இந்தியமக்களுக்குப்பெரும்அதிர்ச்சியை உண்டுபண்ணியிருக்கிறது; இந்திய வெளிநாட்டுக்கொள்கைக்கும் பேரிடிவிழுந்திருக்கிறது; திபேத்தில் சீனுவின் பலம் அதிகரித்திருப்பதால் இந்தியா கவனமாயிருக்க வேண்டிய காலம்வந்துவிட்டது" என்று "டைம்ஸ் அப் இந்தியா" எனும்பத்திரிகை எழுதியிருக்கிறது. நேருவுக்குத் திபேத்து நெருக்கடி பெருந்தலையிடியாக எழுந்துள்ளது; திபேத்துமக்களின் உண்மைத்தலைவர் தலாய் லாமாவே; அவருக்காகப்புரட்சிக்காரர் போரிடத்தான் போகின்றனர்; இந்தநிலையில் பாரதப்பிரதமர் என்னசெய்வதென்று அறியாதிருக்கிறார்; சீனப்பிரதமர் சௌ-என் லாயுடன் மனஸ்தாபப்பட அவருக்கு விருப்பமில்லை; ஆனால், திபேத்துக்கருகிலுள்ள பூத்தான்போன்றநாடுகள் கிளர்ச்சிசெய்தால் கம்யூனிஸ்தசீனுவுடன் இந்தியாவும் மோதவேண்டித்தான் நேரிடுமென்று "நியூ ஸ்றேற்ஸ்மன்" என்ற வாரசஞ்சிகை கூறுகிறது.

### அழிந்துபோகாதிருக்க ஒரேவழி

"அணுக்குண்டு, சலவாயுக்குண்டு ஆகியவற்றால் பயமுறுத்தப்பட்டுவரும் உலகில் திபேத்துப்போன்ற சின்னஞ்சிறுநாடுகள் உயிர்வாழஇடமில்லை; சர்வோதயம், அகிம்சை லட்சியங்கள் மூலமே மனிதசமூகம் கடைத்தேறமுடியும்" என்று இந்தியாவிலே பிவானிஎனுமிடத்தில் நடைபெற்றகூட்டம்ஒன்றில் ஆச்சாரியா விநோபாவே அவர்கள் கூறியிருக்கின்றார். மேலும், அவர்கூறியதாவது: "மனிதன் இன்று கொடிய வனவிலங்குகளுக்குப் பயப்படவில்லை, ஆனால், தன்னைப்போன்ற மனிதனைக்கண்டே அஞ்சுகிறான், நடுங்குகிறான். அமெரிக்காவுக்கும், ருஷியாவுக்குமிடையே நடந்துவரும் பிரட்டல்யுத்தம் ஒருநாட்டுமக்களை இன்னொருநாட்டுமக்களுக்கு அஞ்சும்படி செய்கிறது. ஆயுதப்பெருக்கப் போட்டியானது பலாத்காரத்திலும், சர்வநாசத்திலும் கொண்டுபோய்விடும். மனிதவர்க்கம் அழிந்துபோகாதிருக்க ஒரேயொருவழி இந்தஆயுதப்போட்டிக்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான். சமாதானம், நல்லெண்ணம் ஆகியவழிகளையே மனிதன்பின்பற்றவேண்டும். ஆயுதத்தால்அன்றி அன்பினாலேயே எதிரியை மடக்கமுடியும்."

● பரிசுத்தபாப்பரசர் தமக்குமுன் திருச்சபையைஆட்சிசெய்த 12-ம் பத்திநாத பாப்பானவரின் ஞாபகார்த்தமாக இத்தாலியிலுள்ள லொறேத்தோமனைத் திருசேத்திரத்துக்கு வெள்ளிக்கதிர்ப்பாத்திரம்ஒன்றை அன்பளிப்புச் செய்திருக்கின்றார். 12-ம்பத்திநாத பாப்பானவர் லொறேத்தோமனைத் திருக்கன்னிகையில் விசேஷநேசம் கொண்டிருந்தாரென்பது அதிலே காண்பிக்கப்பட்டிருக்கிறது.

● போலிஷ் கல்விமந்திரிகாரியாலயம் செய்துள்ள ஓர்சட்டப்படி இனிமேல் போலாந்துதேசத்தில் பெரியவியாழன், பெரியவெள்ளி, பெரியசனியாகிய மூன்றுதினங்களும் விடுமுறைநாட்களாய் இருக்கமாட்டா. முன்னர் பாஸ்குவாரத்துக்கும், முதல்நன்மைக்கும் பாடசாலைப்பிள்ளைகளை ஆயத்தஞ்செய்வதற்கென இத்தினங்கள் திருச்சபையால் பயன்பட்டுவரலாயின.

## அர்ச். 10-ம் பத்திநாதரின் புனித உடல்

பாப்பானவராகத் தெரியப்படுமுன் வெனிஸ்நகரின் பத்திறியாக்குவாக விளங்கியிருந்த அர்ச். 10-ம் பத்திநாதரின் புனித உடலானது வெனிஸ் நகருக்கு எடுத்துச் செல்லப்படும்போது அவரின் பிறந்தவிடமாகிய றியெஸி எனும் கிராமத்தையும் அது தரிசித்துச்செல்லும். அவரின் புனிதஉடல் வெனிஸ்நகர் அர்ச். மாற்குவின் மகாதேவாலயத்தில் ஒருமாதகாலம் தங்கியிருக்கும். அர்ச். 10-ம் பத்திநாதரை மகிமைப்படுத்தும் பொருட்டு வெனிஸ்நகரில் நிகழவிருக்கும் திருவைபவங்களிலே தமது பிரதிநிதியாக இருக்கும்படியாக அருளப்பபாப்பரசர் வெனிஸ்நகரின் பத்திறியாக்குவான கருதினல் ஊர்பானி ஆண்டவரை நியமனஞ் செய்திருக்கின்றார்.

---

### 24-வது அருளப்ப பாப்பாசராய்
## இருந்திருப்பார்

அர்ச். 10-ம் பத்திநாதர் அப்போது தம்முடைய கருத்தை மாற்றியிராதிருந்தால் தற்போதைய பாப்பரசர் மற்றோர்நாமத்தை — அதாவது 24-ம் அருளப்பர் எனும் நாமத்தைக் கொண்டிருப்பார். 1903-ம் ஆண்டு புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்காகக் கருதினல்மாரின் திருக்கூட்டம் கூடுவதற்குச் சிறிதுவேளையின்முன் அர்ச். 10-ம் பத்திநாதர் தமது நண்பர் ஒருவருடன் சம்பாஷித்தபோது, தாம் பாப்பரசராகத் தெரியப்படுமிடத்து 23-ம் அருளப்பர் எனும் நாமத்தையே தரித்துக்கொள்ள விருப்பதாகத் தெரிவித்திருந்தார். ஆனல், அவர் பாப்பரசராகத் தெரியப்பட்டதும் அறியப்படாத காரணங்களையிட்டு அதற்குப்பதில் பத்திநாதர் என்னும் நாமத்தைத் தரித்துக்கொண்டார். இச்சம்பவம் பரிசுத்த பிதாவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட புத்தகம் ஒன்றிலே வெளியாகியிருக்கிறது.

---

### ஐக்கிய அமெரிக்க தேசமும்
## கத்தோலிக்க திருச்சபையும்

சனசமூகத்திலே கத்தோலிக்க திருச்சபை "முக்கியத்துவத்திலும், முதன்மையிலும் வளர்ச்சியடைகின்றது" என்பதையிட்டு அதிலே பொருமைப்படுவது தவருகுமென்று ஐக்கிய அமெரிக்க தேசத்திலுள்ள தேசீய லுத்தேர் சபையார்சங்கத்தில் ஓர் அதிகாரியான டக்றர் ருெபேட் டெயூசன் அவர்கள் சமீபத்திலே அச்சங்க அங்கத்தவர்களிடம் கூறலாயினர். கத்தோலிக்க திருச்சபையின் செல்வாக்கு அதிகரித்துவருகிறது என்பதற்கான இரு அறிகுறிகளையும் அவ்வேளை அவர் குறிப்பிடலாயினர். (1) 12-ம் பத்திநாத பாப்பானவரின் மரணத்தையும், கருதினல்மார் திருச்சங்கம் விஸ்தரிக்கப் பட்டதையுமிட்டு உலகபத்திரிகைகள் பெரும் பிரஸ்தாபமாகச் செய்திகள் வெளியிட்டமை. (2) தேசத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களிலே கத்தோலிக்கஅபேட்சகர்கள் வெற்றியீட்டியமை. அங்ஙனம் வெற்றியீட்டியமையானது, "ஓர் ரோமான்கத்தோலிக்கராய் இருந்தால் அரசியல்பதவிகளில் அவரை எதிர்க்குங்காலம் தீவிரமாகக் கழிந்துகொண்டு போகிறது" என்பதையே கருதுகின்றது; பயன் தருவதான இந்த வளர்ச்சியையிட்டுப் புரொட்டஸ்தாந்தர் அழுக்காறு கொள்ளப்படாது; ஆனல், அவர்களும் அதைப்பார்த்துச் சமமாக முயலவேண்டுமென்றும் அவர் கூறலாயினர்.

---

### அரசியற்கட்சியை அடியிட்ட
## இத்தாலிய குருவானவர்

இத்தாலிய செனற்சபையின் சீவிய அங்கத்தவர்களில் ஒருவரும், இத்தாலிய மக்கள்கட்சியை அடியிட்டவருமான வண. லூய்ஜி ஸ்ருர்ஸோசுவாமியார் தற்போது ஓரளவில் இளைப்பாறி அத்தேச கன்னிகாமடம் ஒன்றில் சஞ்சரித்துவருகின்றார். தற்போது இவர் 87 வயதுடையவராயிருந்தும் அரசியல்விஷயமாய் இன்றுமே அதிகசிரத்தை எடுத்துவருகின்றார். மிக முக்கியமான கருமங்கள் நிகழும்போது இன்றுமேஅவர் செனற்சபைக் கூட்டத்துக்குச்சென்று வாக்களித்துவருகின்றார். இன்றுமே அரசியல் பிரச்சினைகள் சம்பந்தமாய்ச் சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் கட்டுரைகள், கடிதங்கள் எழுதிவருகின்றார். 1870-ம் ஆண்டு ரோமைநகர் வீழ்ச்சியடைந்தபின் பொதுசன வாழ்க்கையிலும், அரசியற்துறையிலும் ஈடுபடாது வாளாவிருந்த கத்தோலிக்கமக்கள் திரும்பவும் அவற்றில் ஈடுபடச் செய்யுமாறு இவர் 1919-ம் ஆண்டு தமது அரசியற்கட்சியை அடியிட்டார். ஆனல், முசோலினியின் பாசிஸ்தஆட்சியுடன் தமதுகட்சி ஒத்துப்போக முடியாதிருந்ததால் 1926-ம் ஆண்டு இத்தாலியிலிருந்துவெளிகொண்டு லண்டன், பரீஸ் முதலாம் நகர்களிலும், சிலவருடகாலம் அமெரிக்காவிலும் சஞ்சரித்துவந்தார். இரண்டாவது உலகயுத்தம் முடிந்தபின் சுவாமியார் இத்தாலிக்குத்திரும்பி அரசியலில் மறுபடியும் ஈடுபட்டு இன்று அத்தேச கிறீஸ்துவ ஜனநாயக கட்சியின் பாட்டனரென அறியப்படுகின்றார். இத்தாலிய கிறீஸ்துவ ஜனநாயக கட்சியாக இன்று விளங்கும் மக்கள்கட்சி அடியிடப்பட்ட நாற்பதாம் ஆண்டு நிறைவுதினம் சமீபத்தில் வந்தபோது இத்தாலிய பிரதமர் அவர் சஞ்சரித்துவருகின்ற கன்னிகாமடஞ் சென்று அதன் ஞாபகார்த்தமாகத் தங்கப் பதக்கம்ஒன்றை அவருக்கு அன்பளிப்புச்செய்யலாயினர்.

---

### கருதினல் நியூமன் ஆண்டவரை
## அறிந்த குருவானவர்

கருதினல்நியூமன் ஆண்டவரை நன்கறிந்தவரும், இங்கிலாந்திலே பர்மிங்காம்நகரதியான சம்பிரதாய சபைக்குச்சேர்ந்த அர்ச். பிலிப்புநேரியாரின் சிற்றாலயத்தில் சஞ்சரித்து வருகிறவருமான வண. டெனிஸ் ஷெயில் சுவாமியார் சென்ற பாஸ்குத்திருநாளையடுத்த திங்கட்கிழமை தமது குருத்துவ 70-ம் வருட நிறைவு விழாவைக் கண்டுகளிக்கலாயினர். கருதினல் நியூமன் ஆண்டவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுவதற்கான விசாரணையை நடத்திவருகின்ற மேற்றிராசன நீதிமன்றத்தின்முன் சாட்சியம் அருளுமாறு சமீபத்தில் அழைக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவராவர். இவர் கருதினல் நியூமன் ஆண்டவரது வாழ்க்கையின் கடைசியானவருடங்களிலே தியான சம்பிரதாயசபைப் பாடசாலை மாணவர்களில் ஒருவராயிருந்தார். பார்சியாவிலே 1814-ம் ஆண்டுமுதல் 1854-ம் ஆண்டுவரை பிரித்தானிய இராசீய தூதுவராயிருந்த சேர் ஜஸ்ரின் ஷெயில்அவர்களின் புதல்வரான சுவாமியார் 1890-ம் ஆண்டு தைமாதம் 13-ந் திகதியன்று தமது சபைக்குரிய உடைகளைக் கருதினல் நியூமன் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொண்டார். அதேவருடம் ஆவணிமாதம் 11-ந் திகதியன்று கருதினல்ஆண்டவர் காலஞ்சென்றார். சுவாமியார் 93 வயதுடையவராயிருந்தும் இன்றுமே தமது திருத்தொண்டுகளை ஊக்கமாக நடத்திவருகின்றார்.

---

## 89,000 பவுண் போதியதல்ல

23-ம் அருளப்ப பாப்பரசர் பல்கேரியாவிலே பரிசுத்த ஸ்தானத்தின் பிரதிநிதியாகப் பணியாற்றிவந்தபோது, இற்றைக்கு 30 வருடங்களின் முன் கிறில் வாஸிலெவ் என்ற அமெரிக்க சித்திரக்கலைஞர் அவரின் பிரதிமை ஒன்றை அழகாகத் தீட்டியிருந்தார். சிக்காகோ நகரிலுள்ள சித்திரக்கலைப்பொருள் வர்த்தகரான திரு. எபிறேயிம் பியாருஎன்பவர் அதனை வாங்குவதற்காக 2,50,000 டலர் அதாவது, 89,000 பவுண் விலைபேசியபோது அந்தவிலைக்கு அதனைக் கொடுக்க அவர்மறுத்துவிட்டார். இவ்வளவு பெருந்தொகைப் பணத்துக்கு அதை விற்றுவிட ஏன் மறுத்தீரென்று திரு. வாஸிலெவ்அவர்களைக் கேட்டபோது: "நான்தீட்டிய இந்தப் பிரதிமை எவ்வளவு பெறுமதியுடையதென்பதை எந்தச் சித்திரக்கலைஞருமே சொல்லிக்கொள்ளமாட்டார்கள்" எனக் கூறலாயினர்.

---

### மார்கறெற் இளவரசியும்
## இராணியாரின் மாதாவும்

எலிசபேத் மகாராணியாரின் தாயார் இம்மாதத்திலே ரோமைநகருக்கு விஜயஞ்செய்யும்போது மார்கறெற் இளவரசியும் அவருடன் செல்லவிருக்கின்றார். அங்கே இருவரும் இம்மாதம் 22-ந் திகதியன்று தங்களுக்கு அருளப்படும் பிரத்தியேகபேட்டி ஒன்றிலே பரிசுத்தபாப்பரசரைச் சந்திப்பார்கள். மார்கறெற்இளவரசி வத்திக்கானுக்கு அளிக்கும் இரண்டாவதுதரிசனை இதுவாகும். 12-ம் பத்திநாத பாப்பானவர் 1949-ம் ஆண்டு மார்கறெற் இளவரசிக்குப் பிரத்தியேகபேட்டி அருளியிருக்கின்றார். கடந்த ஐம்பதுவருடகாலத்திலும் வத்திக்கானைத் தரிசிக்கும் பிரித்தானிய இராசகுடும்பத்தைச்சேர்ந்த முதலாம் ஆள் மார்கறெற் இளவரசியேஎன்று பரந்துள்ளசெய்திகள் முற்றுமே பொய்யாகும். மகாராணியின் தாயார் ரோமாபுரிக்கு விஜயஞ் செய்வது இதுவே முதன்முறையாகும்.

—*—

# சோவியற் ருஷியா மூடிய 46,000 கோவில்கள்

மஸ்கோவின் குரலுக்குச் செவிசாய்த்து இலங்கையிலுள்ள கம்யூனிஸ்தர்கள் திருச்சபையை உக்கிரமமாகத் தாக்கிக்கொண்டு வரும்போது — மாக்ஸிய தத்துவத்துக்குப் பிரமாணிக்கமாய் நடந்துவரும் சீனக் கம்யூனிஸ்தர்கள் தீபேத்திலே புத்தசமயத்தை அழித்துக்கொண்டு வரும்போது ருஷியாவிலிருந்து சமயத்தைப் பற்றிய சிலஉண்மைகள் சுதந்திரஉலகத்திலே வெளிவந்திருக்கின்றன. ரோமாபுரியிலுள்ள "றஸிக்கும்" என்ற பாப்பரசரின் ருஷிய குருமடத்தின் யேசுசபையைச்சேர்ந்த வண. தியோப்பிலஸ் ஜோருசெக் சுவாமியார் சமீபத்தில் பேசியபோது, பொல்ஷெவிக் அரசியற்புரட்சிக்கு முன் ருஷியாவில் இருந்துவந்த 50,000 பிரிவினைச்சபைக் கோவில்களில் அருமையாக 4,000 கோவில்களே இன்னும் திறந்திருக்கின்றனவெனக் கூறலாயினர்.

20,000 கோவில்கள் இன்னமும் திறந்திருக்கின்றனவென்று மஸ்கோநகர பிரிவினைச்சபை அதிமேற்றிராணியார் நிக்கொலாய் பாராட்டிக் கூறிவருவதெல்லாம் பருப்பித்து உரைக்கப்படுவதென்று சொல்லிச் சுவாமியார் தள்ளிவிட்டிருக்கின்றார். சோவியற்ருஷியா முழுவதிலும் மூன்றே மூன்று—அதாவது மஸ்கோவில் ஒன்றும், லெனின்கிருட்டில்ஒன்றும், ஒடெஸாவில் ஒன்றுமாக மூன்றேமூன்று கத்தோலிக்க கோவில்கள் மாத்திரமே இருக்கின்றன.

1956-ம் ஆண்டிலே அதிகாரபூர்வமான சோவியற் நாஸ்திகஸ்தாபனம் தனது சமயப் போரை அதிகம் உக்கிரமமாக நடத்தியது. உதாரணமாக அது ருஷியாவிலே நாஸ்திகத்தைப் புலப்படுத்தி 20லட்சம் உபந்நியாசங்களுக்குமேல் நடத்தியிருக்கிறது. அவ்வருடத்திலே எந்த விதமான சமய அப்போஸ்தலமும், சமயபோதனையும் விலக்கப்பட்டிருந்தன. இவ்வாறெல்லாம் சமய சுதந்திரத்தை மறுத்து வேதகலாபனை நடத்தப்பட்டு வந்தபோதிலும் ருஷியமக்களில் பெருந்தொகையான பிரிவினர் விசுவாச பிரமாணிக்க முடையவர்களாய் இருந்துவருவது, கம்யூனிஸ்தர்களை எதிர்நோக்கியுள்ள பெருஞ்சங்கடமாயிருக்கின்றது.

### சித்திரை மாதம்

**பொதுக்கருத்து:** கிறீஸ்துநாதரை அகற்றிய சமுதாயத்தில் உழைக்கும் குருமாருக்காக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** இரட்சணிய அலுவலில் ஈடுபடும் சாதாரணகத்தோலிக்கர் தங்கள் ஞானப்பணிக்குத் தேவையான ஆத்மீக, போதனை, விஞ்ஞான, யந்திரீகஅறிவில் உறுதியாக ஆயத்தப் படுத்தப்படுமாறு மன்றாடிக் கொள்வது.

சத்திய வேத
# பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
சித்திரை மாதம் 16-ந் திகதி

## கம்யூனிஸமும் பிக்குகள் சங்கமும்

நிகழும்நூற்றாண்டிலே உலகம் கண்ட மாபெரும் கெடுதிகளில் ஒன்று கம்யூனிஸம் -- அதாவது நாஸ்திக லோகாயத பொதுவுடைமையாகும். அதன்குரூரத்தனமும், கொடுங்கோன்மையும் எத்துணைபயங்கரமானவை என்பதைக் கண்டுகொள்ளவேண்டுமா? இரும்புத்திரைக்குப் பின்னுலுள்ள கிழக்கு ஐரோப்பியநாடுகளைக் கண்கொண்டு நோக்கினுல், அங்கே கோடிக்கணக்கான மக்கள் சமயசுதந்திரம், பேச்சுச்சுதந்திரம், சமூகசுதந்திரம், அரசியற்சுதந்திரம் சகலமும்இழந்து அடிமைகளைப்போல் அடக்கியொடுக்கப்பட்டு நிர்ப்பாக்கியராய் வாழ்வதைக் காணலாம். கிழக்குஆசியநாடுகளைக் கண்கொண்டுநோக்கினுல், அங்கேயும் மூங்கில்திரைக்குப்பின்னுல் கோடிக்கணக்கானமக்கள் அவ்வாறே சகலசுதந்திரமும் இழந்து அடிமைகளைப்போல் அடங்கியொடுங்கி நிர்ப்பாக்கியராய் வாழ்வதைக் காணலாம். அகிலமுழுவதையுமே கண்கொண்டு நோக்கினுல், கம்யூனிஸம் எங்கெங்கு கால் வைக்கின்றதோ, எங்கெந்த நாடுகளில் கை வைக்கின்றதோ அங்கங்கெல்லாம் — அந்தந்த நாடுகளிலெல்லாம் ஓரேகலவரமும், ஒரேகுழப்பமும், ஒரே சச்சரவுமாய் இருப்பதைக் காணலாம். கடைசியாக ஓர்புத்தநாடாகிய திபேத்தில் நடைபெற்றுள்ள ஈனவிரக்கமற்ற குரூரசனசங்காரங்களைப்பற்றி வெளிவந்துள்ள செய்திகள் உலகில் — விசேஷமாய்ப்புத்தஉலகில் பெருந்திகிலையும், ஆத்திரத்தையும் உண்டுபண்ணியிருக்கின்றன.

நாஸ்திகமே உருவெடுத்த கம்யூனிஸம் எங்கெங்குமே சகல சமயங்களினதும் சென்மசத்துருவாயிருந்து அவைகளைப் பூண்டோடு களைந்துவிடுவான் முனைந்து கடந்தநாற்பதுஆண்டுகளிலும் செய்துள்ள அட்டூழியங்களோ அம்மம்ம! இம்மட்டன்று. அதன் சமயநிஷ்டூரங்களால் அந்தோ! இதுவரை உயிர்இழந்தவர்களும், குருதிசிந்தியவர்களும், நாடிழந்தவர்களும், வீடிழந்தவர்களும், அடிமைத் தொழில்முகாங்களில் அநியாயமாக வேலைகொள்ளப் படுகிறவர்களும், சிறைவாசஞ்செய்கிறவர்களும், கொல்லாமல் கொன்றழிக்கப்படுகிறவர்களும், குளிரால் வதங்கி உயிர்மாளுகிறவர்களும் இத்தனைபேரென்று எவரால் கணக்கிடமுடியும்? இன்னும் அதனுல்தகர்க்கப்பட்ட ஆலயங்களும், மடாலயங்களும், சமயஸ்தாபனங்களும், மூடவும், பறிமுதலாக்கவும்பட்ட ஆலயங்களும், மடாலயங்களும், சமயஸ்தாபனங்களும், பிறவும் இத்தனையென்று கணிக்கமுடியுமா? கம்யூனிஸம் அடியெடுத்து வைக்கும்—அடிப்படுத்தும் இடங்களிலெல்லாம் சமயதுவேஷங்களைக் கிளப்புவதும், சமயங்களை அழிப்பதும் அதன் சுயகுணமாகும். ஏனெனில், சமயம் என்பது "மக்களுக்குஅபின்" என்பது மாக்ஸிய சித்தாந்தமாகும். அதனுல் கிழக்கு ஐரோப்பாவிலும், கிழக்கு ஆசியாவிலும் கோடிக்கணக்கான மக்களை ஏமாந்தவர்களாகவும், அடிமைகளாகவும் ஆக்கித் தன்னிஷ்டம்போல ஆட்டிவைத்துக்கொண்டிருக்கும் கம்யூனிஸத்துக்கு இந்நாட்டுமக்கள் பலியாகாது எச்சரிக்கையாய்இருக்கவேண்டும். பலியானுலோ அன்றொருநாள் மந்திரிஒருவர் சொன்னவாறு, 2500 வருடங்களாகப் பாதுகாக்கப்பட்டுவந்த இந்நாட்டின்கலாசாரமும், பண்பாடும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிடும்.

நிற்க, சென்றவருடம் வைகாசி, ஆனிமாதங்களில் நிகழ்ந்தசம்பவங்கள் நமது மனக்கண்கள் முன்பாக இன்றுமே புத்தம்புதியனவாகக் காட்சியளிக்கின்றன. அப்போது நேர்ந்தபயங்கர உயிர்ச்சேதங்களையும், கேடுபாடுகளையும் இன்றுமே எவரும் மறந்தபாடில்லை. ஆனுல், இந்தக் குரோத விரோதங்களுக்குக் காலாயிருந்தவர்கள் தகுந்தபாடம் படித்திருப்பதாகப் புலப்படவில்லை. மொழிப்பிரச்சினைபோய், இனப் பிரச்சினை போய், இன்று மதப்பிரச்சினையிலே அவர்கள் இறங்கியிருக்கின்றுர்கள். அவர்களின்குரோதக்கண் இன்று கத்தோலிக்க திருச்சபையிலே திருப்பப்பட்டிருக்கிறது. கலியாணவீட்டிலே கட்டியழுகிறவர்கள் இழவுவீடென்றுல் வாளாகைகட்டிக்கொண்டிருப்பார்களா? அவர்களின் தாளத்தைக் கவனித்துக் கம்யூனிஸ்தர்களும், ஏனையமாக்ஸியவாதிகளில் ஒருபாலாரும் கூத்தாடுகின்ற இச்சந்தர்ப்பத்திலே திபேத்தில்நிகழ்ந்துள்ளபயங்கரசம்பவங்கள் இவர்களது முன்னேடிகளின் கவனத்தை மறுபக்கம் திருப்பியதுடன் கம்யூனிஸ்தர்கள், ஏனையமாக்ஸியவாதிகளை எதிர்க்கவும்வழிதிறந்துவிட்டிருக்கின்றன. திபேத்திய சம்பவங்கள் இலங்கைப்புத்தகுருமார், புத்தசமயத்தவர்களிடையே பெரும்கொந்தளிப்பை உண்டுபண்ணியிருக்கின்றன. ஆனுல், இவர்களின் எடுப்புகளுக்கும், எதிர்பேசுதல்களுக்கும், எண்ணங்களுக்கும் சீனக்கம்யூனிஸ்தர்கள் அடிபணிவார்களா? அடிபணிந்து இதோஓடிப்போகிறேமென்று திபேத்தை விட்டுக் கௌரவத்துடன்வெளியேறுவார்களா? இதுதானே ஒருபோதும் நடக்கப்போகாத ஓர் சம்பவம். ஆனுல், கத்தோலிக்கசமயத்தை எதிர்த்துக்காரசாரமாகக் கண்டனஞ்செய்யத் தொடங்கியிருக்கும் இலங்கைக் கம்யூனிஸ்தகட்சியும் உணவுமந்திரி பிலிப்குணவர்த்தனவைத் தலைவராகக்கொண்ட விப்ளவகார லங்கா சமசமாஜ கட்சியும் இப்போது புத்தபிக்குகள் செய்யுங்கிளர்ச்சியையிட்டு என்னசெய்யப் போகின்றன? இலங்கையிலே கம்யூனிஸ்தகட்சியைச் சட்டவிரோதமானதாக்க வேண்டும்; லங்கா—சீனஇராசிய உறவுகளை உடனடியாக முறிக்க வேண்டும்; லங்கா-சீன வர்த்தக உடன்படிக்கையை உடனே தானேநிறுத்தவேண்டுமென்று புத்தபிக்குகள்செய்யும் கூச்சல் கேட்டு இந்தக்கட்சிகள் அவர்களைக் கண்டனஞ்செய்யுமா? செய்யமுனையுமா? தாங்களும் எதிர்க்கூச்சலிடுமா? கத்தோலிக்க சமயம்அல்ல, கம்யூனிஸமே தங்கள்சத்துருஎன்பதைப் புத்தமக்கள் உணரும் காலம் அதிகம் தூரத்தில் இல்லையென்றே சொல்லலாம்.

---




## சதாசகாயமாதா கோணம்

—:—

### "குடும்பசெபமாலையின் வல்லபம்"

பரலோகஇராக்கினியே, செபமாலைத் தாயே, சதாசகாயமாதாவே நான் இதுவரை எனதுநன்றியைத் தெரிவிக்கச் சங்கிய நன்றிகெட்டதனத்தைத் தயவாகமன்னித்தருளும். நான் கதிகலங்கி, நிலைதவறி அவதிப்பட்டபோது எனக்கு உதவியளிக்க முன்வந்த உத்தமகன்னிகையே, உமக்குக்கோடிநமஸ்காரம். குற்றமில்லாது நான் எனது வேலையிலிருந்து நீக்கப்பட்டேன். அதிலிருந்து எனது இடைஞ்சல்களையும், தொல்லைகளையும் உமக்குச்சொல்லி உமது உதவியைக்கேட்டேன். என் வேண்டுகோளை உடனுக்குடன்தானே நீர் உவந்துஏற்றுக்கொண்டதாக எனக்குத் தெரியவில்லை. அதனுல் உமதுமட்டில் நான்கொண்டிருந்த நம்பிக்கை படிப்படியாகக் குறையத்தொடங்கியது. அவநம்பிக்கைப்பேய்க்கு ஆளானேன். மாதங்கள்பல கழிந்தன. கையிலிருந்த சொற்பபணமும் குறைந்துகொண்டேபோனது. பதினொருமாதங்களின்பின் நானும், எனதுமனைவியும் பசிப்பிணியின்கொடுமையை அநுபவத்தில்கண்டறியத் தொடங்கிவிட்டோம். திடீரென நம்மிருவருக்கும் ஒருபுத்துணர்ச்சிபிறந்தது, தேவதாயாரின் விசேஷ அருளென்றே நம்புகிறேம். அன்றுதொட்டுநாம் குடும்பசெபமாலை ஓதத்தொடங்கினேம்.

குடும்பசெபமாலை ஓதத்தொடங்கி ஒருகிழமை முடியாமுன்னரே ஒருநேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டேன். மாதம்முடிவடையமுன்னரே, நான் விண்ணப்பம்முதலாய் அனுப்பாத ஓர்வியாபாரஸ்தாபனத்திலிருந்து காத்திராப்பிரகாரமாக எனக்கு ஓர் அழைப்புக்கடிதம் கிடைத்தது. அடுத்தநாளே நான்வேலையில் அமர்த்தப்பட்டேன்.

செபமாலைஇராக்கினியே! குடும்பசெபமாலையின் வல்லமையை இதுவரை நான் சரியாக உணர்ந்தேன் அல்ல. உத்தியோகம்தேடித்தந்ததோடுநின்றுவிடாது, உத்தியோகம்கிடைத்த ஒரு மாதத்துக்குள் எனக்கு இரண்டுபதவி உயர்ச்சிகளையும் பெற்றுக்கொடுத்தீர். இப்போது பொறுப்புவாய்ந்த நல்ல பதவிவகித்துச் சந்தோஷமாகச்சீவித்து வருகிறேன். இவற்றிற்கெல்லாம்காரண் குடும்பசெபமாலைப் பக்தி என்பதற்கு அணுவளவேனும் சந்தேகமில்லை.

எனவே நானும், எனதுமனைவியும் எங்கள் சீவியகாலம்மட்டும் குடும்பசெபமாலையை நாளாந்தம்சொல்லிவரத் தவறமாட்டோம். இப்பக்தியில் நாங்கள்நிலைத்திருக்க எங்களுக்குத்தேவையான வரப்பிரசாதங்களை உமதுதிருமகனிடம் பெற்றுத்தாரும். அல்லாமலும், எங்களைப்போல மனச்சோர்வடைந்து அந்தரிப்போருக்கும் எங்களுக்கு அளித்ததுபோலத் தேவஉதவியைக்கொடுத்து, அவர்களும் குடும்பசெபமாலைசெபித்துப் பலனடைய உதவிசெய்தருளும்படி உம்மைஇரந்து மன்றுடுகிறேம்

"தஞ்சமென வந்தவரைத் — தாயே
தாங்கு செபமாலை மரியாயே"

(கொழும்பு, பமன்கடைஒழுங்கை 61-ம் இலக்க வீட்டில்வசிக்கும் பஹாந்தவும், அவர் பாரியாரும் "நோவனைப்புதினம்" எனும் ஆங்கிலபத்திரிகைக்கு எழுதிஅனுப்பிய நன்றித்துதியின் சாரம்.)

---

## புதியவிக்கார் ஜெனறல்கள்

இலங்கைக்குவெளியே சென்றிருக்கின்ற மகாவண. ஏ. செறுசுவாமியவர்கள் இடமாகக் கொழும்பு, அதிமேற்றிராசன விக்கார்ஜெனறலாய்த் தற்காலிகமாகக் கடமைபார்க்கும்படி வண. சி. ஜே. றேய்மன்சுவாமியவர்கள் கொழும்பு அதிமேற்றிராணியாராலே நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றுர்.

தற்போது கொழும்பு, சஞ்சுசையப்பர்கல்லூரி அதிபராய் இருந்துவருகிறவரான அதிவண. பீற்றர் ஏ. பிள்ளைசுவாமியவர்கள் கல்லூரி அதிபருக்குரிய தமது கடமைகளுடன் சாதாரண கத்தோலிக்க அப்போஸ்தலத்துவத்துக்குப் பொறுப்பாளியான விக்கார் ஜெனறலாகவும் கொழும்பு அதிமேற்றிராணியாராலே நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றுர்.

## பிக்குகளும் பிரதமர் நேருவும்

திபேத்தில்நிகழ்ந்துள்ள சம்பவங்களைத்தொடர்ந்து இலங்கையிலுள்ள புத்தபிக்குகள் ஆக்கியிருக்கும் "ஸ்ரீலங்கா மகாபிக்குசங்க"மானது திபேத்தில் சீனுவின் ஆக்கிரமிப்பை ஒழிக்க உடனடியாக நடவடிக்கைஎடுக்கும்படி இந்தியபிரதமர் நேருவைக் கேட்டுக்கொள்ளும் மனுஒன்றைத் தயாரித்துவருவதாகத் தெரியவருகிறது திபேத்தின்விவகாரத்தில் பிரதமர்நேரு பாராமுகமாக இருக்கிறுர்; இதுவிஷயமாய் அவர் அசமந்தமாயிருந்தால் அடுத்தபடியாகச் சீனுவின்ஆக்கிரமிப்புக்கு இந்தியா பலியாகலாமென்று அம்மனுவிலே சுட்டிக்காட்டுவதெனச் சங்ககம்மிற்றி தீர்மானித்திருக்கிறது.

## கோழியால் நேர்ந்தகொலை

வத்தேகாமத்தைச்சேர்ந்த இனிமல்வல எனும்கிராமத்திலே சென்ற வெள்ளிக்கிழமை ஓர்தோட்டத்தில் மேய்ந்துகொண்டிருந்த கோழியை அத்தோட்டத்தின் சொந்தக்காரர் பிடித்துக்கொன்றுவிட்டார். அதனுல் கோழியின் சொந்தக்காரருக்கும், தோட்டக்காரருக்குமிடையே சண்டைமூண்டுகொண்டது. அதில் மற்றும்நான்குபேரும் சேர்ந்துகொள்ளவே தடிகளும், இரும்புக்கம்பிகளும் தாராளமாகஉபயோகிக்கப்பட்டன. கோழியைக்கொன்றவர் படுகாயமடைந்து உயிர்துறந்தார். இதுசம்பந்தமாக ஐவர்கைதுசெய்யப் பட்டிருக்கிறுர்கள்.

# சுதேச வர்த்தமானம்

### எம். பி.க்குக் கத்திக்குத்து

மொறட்டுவாப் பட்டினசபைத் தலைவரும், பாராளுமன்றத்திலே மொறட்டுவா எம். பி.யுமான திரு. மெறில் பெர்னண்டோவைச் சென்ற 12-ந்திகதியன்று பட்டினசபைத் தொழிலாளி ஒருவன் பின்புறமாகச்சென்று கத்தியால்தாக்கிக் குத்திவிட்டான். சபையின் மாதாந்தகூட்டம்முடிந்து அவர் வீடுதிரும்பிக்கொண்டிருந்தபோதே அவர்குத்தப்பட்டார். ஆனால், காயம் அபாயகரமான தல்லவென்று ஆஸ்பத்திரிஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### தூதுக்கோஷ்டியின் கோரிக்கைகள்

தற்போது பிரதமர்பண்டாரநாயகா நுவரெலியில் இருந்துவருகின்றார். அவர் கொழும்புக்குத் திரும்பியதும் பிக்குகள் மகாசங்க தூதுக்கோஷ்டி ஒன்று அவரைச்சந்தித்து, (1) சீனவுடன் இருந்துவரும் இராசீய உறவுகளை இலங்கை முறித்துக்கொள்ள வேண்டும், (2) இலங்கை - சீன வர்த்தக உடன்படிக்கையை நிறுத்திவிட வேண்டும், (3) திபேத்திலே கம்யூனிஸ்த சீனர்களின் நடவடிக்கையை எதிர்க்க வேண்டுமென்று அவரைக் கேட்கவிருக்கின்றது.

### தமிழ்ச் சர்வகலாசாலை இயக்கம்

தமிழ்ச் சர்வகலாசாலைஇயக்கம் திரிகோணமலையிலே ஐந்தரைஏக்கர்நிலம் பெற்றிருக்கின்றது. அங்கே தமிழ்ச் சர்வகலாசாலைக் கல்லூரிக்கு அடுத்த வைகாசிமாதத்தில் அத்திபாரக்கல்நாட்டப்படும். இச்சர்வகலாசாலைக் கல்லூரி தமிழ் இலக்கியத்தையும், தமிழ்ப் பண்பாட்டையும் பரவச்செய்வதோடு தொழில்நுட்பக்கல்வியில் பயிற்சியளிக்கவும் இருக்கிறது. அதாவது விவசாயகைத்தொழில் முயற்சிகளில் தமிழ் இளைஞர்கள் ஈடுபடுவதற்கு இது உற்சாகம்அளிக்கும். இதில் சாதிசமய வேறுபாடு காண்பிக்கப்படமாட்டாது. திரிகோணமலையிலுள்ள துறைமுக உள் வீதியில்தான் இக்கல்லூரிக்கென்று ஐந்தரைஏக்கர்நிலம் பெறப்பட்டிருக்கிறது. இதன் கலை, விஞ்ஞான, தொழில்நுட்ப கூடங்களும், நிர்வாககட்டடமும் துறைமுகத்தை எதிர்நோக்கியிருக்கும் அழகான இந்த நிலத்தில் அமைக்கப்படவிருக்கின்றன. முழுக்கட்டடங்களையும் கட்டிமுடிக்க இருபது லட்சம்ரூபா செலவாகுமெனத் தெரியவருகிறது. மேலும் மாணவர்களின் விடுதிமண்டபங்களை அமைப்பதற்கென்று உப்புவெளிப்பகுதியில் நிலம் பெறுவதற்கான முயற்சிநடக்கின்றது.

### கம்யூனிஸ்தகட்சியைத் தடைசெய்க

இங்குள்ள கம்யூனிஸ்தகட்சி தடைசெய்யப்படாவிட்டால் திபேத்தில்நடைபெற்ற அதேசம்பவம் இலங்கையிலும் நடைபெறும்; ஆகவே, இலங்கைக் கம்யூனிஸ்தகட்சியைத் தடைசெய்துவிடும்படி சிங்கள சாதிகசங்கம் பிரதமர் பண்டாரநாயகாவைக் கேட்டிருக்கிறது. "எல்லாநாடுகளிலும் கம்யூனிஸ்தகட்சிதான் குழப்பங்களுக்குக்காரணம்; ஆதலால் அதனைஉடனடியாகத் தடைசெய்ய வேண்டும்; சுதந்திர ஐக்கியசமுதாயம் ஒன்றை ஏற்படுத்துவதைக் கம்யூனிஸ்த கட்சி ஆதரிக்கவில்லை; இந்தக்கட்சியினர் மஸ்கோவுக்குத்தான் கடமைப்பட்டிருக்கின்றனர்; திபேத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைக்குக் கம்யூனிஸ்த கட்சிதான் காரணம்; இலங்கையிலே கம்யூனிஸ்தகட்சிக்கு உடனடியாகத் தடையுத்தரவு பிறப்பிக்கப்படாவிட்டால் திபேத்தில்நடந்ததுபோலவே இங்கும்நடக்கும்" என்று இந்தச்சிங்களசாதிகசங்கம் பிரதமருக்குஅனுப்பியுள்ள மனுவிலேதெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### வீதிவிபத்துகளும் மரணங்களும்

இலங்கை வீதிகளிலே சென்ற 1958-ம் ஆண்டு நிகழ்ந்த விபத்துகளில் 384 பேர் கொல்லப்பட்டிருப்பதாகப் பொலிஸ்பகுதி நிர்வாக அறிக்கைக்கான புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்த விபத்துகளிலே உயிர் இழந்த 384 பேரிலும் 239 பேர் பாதசாரிகள். 50 பேர் சைக்கிளிலே சென்றவர்கள். 60 பேர் பிரயாணிகள். 35 பேர் இரதசாரதிகள். வீதிவிபத்துகளிலே 8,461 பேர் காயமடைந்திருக்கின்றார்கள். வடமாகாணத்தில் நிகழ்ந்த விபத்துகள் 583

### இந்தியாவுக்குத் தபாற்சலார்

அரசாங்க தபாற்பகுதி சென்ற 8-ந் திகதியன்று வெளியிட்டுள்ள அதிகாரபூர்வமான ஓர்அறிக்கைப்படி இம்மாதம்15-ந்திகதியாகிய நேற்றுப்புதன்கிழமைமுதல் இந்தியாவுக்குச் சாதாரணதபால் ஒருஅவுண்ஸ்நிறைக்கு 25 சதம். மேற்கொண்டு ஒவ்வொரு அவுண்ஸுக்கும் 20சதம். தபாற்காட்டுக்கு 20 சதம். புக்போஸ்ற் ஒவ்வோர் இரண்டுஅவுண்ஸுக்கு 5சதம். றெஜிஸ்தர் சலார் 50சதம். விமானத்தபால் ஒவ்வோர்அவுண்ஸுக்கும் 45சதம். ஏயர்லெற்றர் 30சதம். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குப் போன்று அதேசலார்கள்தான்.

### வெளிநாட்டு வர்த்தகவீழ்ச்சி

சென்றமாசிமாதம் இலங்கையின் வெளிநாட்டுவியாபாரத்தில் 3கோடியே30லட்சம்ரூபா குறைந்திருக்கிறது. அதற்குமுந்தியமாதத்தில் 1கோடியே 80லட்சம்ரூபா குறைந்துள்ளது. சென்றமாசிமாதத்தில் 12கோடியே60 லட்சம்ரூபா பெறுமதியானபொருட்கள் இலங்கையிலிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டன. ஆனால், அம்மாதத்திலே பிறநாடுகளிலிருந்து 15கோடியே90லட்சம்ரூபா பெறுமதியானபொருட்கள் இலங்கையில் இறக்குமதிசெய்யப்பட்டன. சென்றகார்த்திகைமுதல் இலங்கையின் ஏற்றுமதித்தொகை குறைந்துகொண்டேவருகிறது.

### திரிகோணமலைத் துறைமுகம்

கொழும்புத்துறைமுகத்திலே தொழிலாளர்தகராறுகள் ஏற்படுவதைத்தொடர்ந்து அடிக்கடி வேலைநிறுத்தங்கள் நடைபெறுவதால் ஏற்றுமதிஇறக்குமதிவேலைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தநிலைமையைச் சமாளிக்கும்படியாகக் காலி, திரிகோணமலைத் துறைமுகங்களை வளப்படுத்தி வர்த்தகத்துறைமுகங்கள் ஆக்குவதென மந்திரிசபை தீர்மானித்துள்ளது. அங்ஙனம் வர்த்தகத்துறைமுகங்களாக்கும் திட்டத்துக்கான செலவைச்சமாளிக்கச் சர்வதேச செலவாணிநிதியின் உதவியை நாடுவதென்றும் மந்திரிசபை தீர்மானித்திருக்கிறது

### கண்டிமன்னரின் வழித்தோன்றல்

கண்டிஇராச்சியத்தின் கடைசிமன்னாயிருந்த ஸ்ரீவிக்கிரம இராசசிங்கனும், இவர்குடும்பத்தினரும் 1816-ம் ஆண்டு அரசியற்கைதிகளாக வேலூர்க் கோட்டைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். அம்மன்னரின் நேர்வழிப்பேரனை ஸ்ரீகண்டி கோவிந்தசாமி இராசசிங்கன் தற்போதுஇலங்கையில் தங்கியிருக்கின்றார். 82 வயதுடையவரான இவர் இப்போதே முதன்முறையாக இலங்கைக்கு விஜயஞ்செய்திருக்கின்றார். இங்கேஇவர் கொழும்பிலே தமது மைந்தர்களான ஸ்ரீகண்டி யோகானந்த இராசசிங்கனுடனும், ஸ்ரீகண்டி சுக்கு இராசசிங்கனுடனும் தங்கியிருக்கிறார். இவ்விருவரும் இலங்கையின் கௌரவ பிரசைகளாக்கப்பட்டு இங்கேயே நிரந்தரமாகச் சஞ்சரித்துவருகின்றனர். மற்றோர்மைந்தர் இந்தியாவிலே விருத்தாப்பியரான தனதுபெற்றோருடன் வசிக்கின்றார். ஸ்ரீவிக்கிரமஇராசசிங்கனும், அவர்பாரியும் அப்போது கண்டியிலிருந்து கொண்டுசென்ற அவர்களின் புதல்வர் ஸ்ரீவெங்கட இராசசிங்கனின் புத்திரன்தான் தற்போதுஇலங்கைக்கு வந்துள்ள ஸ்ரீகோவிந்தசாமி இராசசிங்கன். இவர் 18வயதுவந்தபிறகுதான் வேலூர்க்கோட்டைக்கு வெளியேசென்று இந்தியாவின் எப்பாகத்திலாவதுபோய்க் குடியேற அனுமதிக்கப்பட்டனர். அப்போது — அதாவது 1896-ம்ஆண்டு இவர்கள் ஆந்திரப்பிரதேசத்திலுள்ள சித்தூரில்போய்க்குடியேறி இன்றுவரை அங்கேயே வசித்துவருகின்றார்கள். இவர்கள் சித்தூரில் போய்க் குடியேறியகாலமுதல் இவர்களுக்கு இலங்கைஅரசாங்கம் அரசியல் பென்ஷன் வழங்கிவருகிறது. ஸ்ரீகோவிந்தசாமி இராசசிங்கன் இலங்கையில் ஒருமாதகாலம் தங்கியபின் சித்தூருக்குத்திரும்புவார். தனக்குவயதாகிவிட்டதால் இலங்கையில் குடியிருக்க இவர் விரும்பவில்லை.

---

### முன்னை நாள் அங்கிளிக்கன்சபைப் பாதிரியார் குருவாயினார்

முன்னர் ஓர் அங்கிளிக்கன் சபைப் பாதிரியாராயிருந்த கனம். வால்ரன் ஹன்னா அவர்கள் சென்ற பங்குனிமாதம் 13-ந் திகதியன்று ரோமாபுரி, அர்ச். லத்தறன் அருளப்பர் மகாதேவாலயத்தில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். தென்னிந்திய கிறீஸ்துவசபையிலுள்ள அங்கிளிக்கன் சபையையும், நொன்கம்போமிஸ்த சபையையும் இணைப்பதில் உண்டான வேண்டாவெறுப்பை எதிர்த்து ஆட்சேபிக்கும் மங்களவார்த்தைக்குழுவின் காரியதரிசியாய் இருந்துவந்த இவர் 1955-ம் ஆண்டு மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொண்டார். அதன்மேல் சிலமாதங்களின்பின் ரோமாபுரி சென்று அங்குள்ள பீதா குருமடத்தில்சேர்ந்து குருப்பட்டத்துக்குப் படித்துவந்தார். இவருடன் மங்களவார்த்தைக் குழுவைச்சேர்ந்த மற்றும்அநேகரும் அப்போது மனந்திரும்பிக் கத்தோலிக்கராயினர்.

---

● சோவியற்ருஷியா அமெரிக்காவைத் தாக்குமானால் சோவியற்ருஷியாவையே முற்றாக அழித்தொழித்துவிடக்கூடிய அணுச்சக்திஆயுதங்கள் அமெரிக்காவிடம் இருப்பதாக அத்தேச அரசாங்க பாதுகாப்புப்பகுதியின் காரியதரிசியான திரு. நீல மகல்ரோய் அன்று டெற்ரோயிட் நகரிலே தெரிவித்திருக்கின்றார்.

● அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சரித்திரப்பிரசித்தி அடையக்கூடியவகையிலே சூரியனைப் படம்பிடித்திருக்கிறார்கள். பூமியில்இருந்து சுமார் 123 மைல்தூரஞ் சென்றுதிரும்பிய ரொக்கெற்ஒன்றின் முகப்பில் வைக்கப்பட்டிருந்த கமெரா மூலம் இப்படம்பிடிக்கப்படலாயிற்று. சூரியனைப்பற்றிய ஆராய்ச்சியில் இது மிகவும் உபயோகப்படுமாம்.

● அடுத்த 5அல்லது 10வருடத்தில் ரொக்கற்மூலம் மனிதனைச் சந்திரமண்டலத்துக்கு அனுப்பிவைத்து, மீண்டும் அவனைப் பந்தோபஸ்தாய்ப் பூமிக்குக் கொண்டுவருவதற்கான யந்திரசாதனங்களை அமைப்பதில் அமெரிக்கா மும்முரமாக வேலைசெய்துவருவதாக ஐக்கியஅமெரிக்கதேச ஜெறயந்திர தொழிற்சாலையைச்சேர்ந்த டக்டர் வில்லியம் பிலேற்றிங் கூறுகின்றார்.


## TUITION
IN
SHORTHAND-TYPEWRITING

Students (either sex) prepared for Pitmans London, London Chamb. of Comm. and other Examinations. Students already trained are in Govt. Service, Firms, Schools and other Institutions.

CHARGES MODERATE

SUCCESS GUARANTEED

JOSEPH ANDREW
"Mazenod House"
4th Cross St., Jaffna.


---

### அர்ச். சூசையப்பரின் சிறியநாய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மரணதூதன்கையில் ஒப்படைக்கப்பட்டவன்போலே காணப்பட்ட தன்புருஷனை ஒருத்தி அந்திரேபிறதருக்குக் காண்பித்து ஆரோக்கியம் இரந்துகேட்கக் கூட்டிக்கொண்டுவந்தாள். பிணியாளர்கள் பெருந்திரளாய் மொய்த்தபடியிருந்தார்கள். இருவரும்தங்கள்முறைஎப்போது வரப்போகுதோஎன்று எதிர்நோக்கியிருக்கையில், சயரோகி அந்திரேபிறதரைத் தெண்டித்துக்கண்டுவிட்டான். கண்டதும் மனைவியைநோக்கி: "என்முறைவருமட்டும் நான் காத்திருக்க வேண்டியதில்லை; எனக்குப் பூரணசுகம் வந்துவிட்டதாக உணருகின்றேன்; வா கோவிலுக்குப்போய்ச் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் சொல்லி நேர்ந்தநேர்த்தியையும் செலுத்துவோமாக" என்றான். இது வீண்நினைவல்ல. அடுத்த நாளே தன்தொழிலைப்பார்க்கத் தொடங்கிவிட்டான். விட்டுப்போன சயரோகம் திரும்ப அவனை எட்டிப்பார்க்கத் துணியவில்லை.

வைத்தியர் பரிசோதனைசெய்து சத்திரவைத்தியமன்றி வேறுஎவ்வைத்தியமும் தற்செய்யாது என்று சொல்லப்பட்டவர்கள் அந்திரேபிறதரின் அடைக்கலத்தை நாடிப்போவார்கள். அவர், "சத்திரவைத்தியஞ் செய்விக்காதே; சஞ்சூசையப்பரை வேண்டிக்கொள்" என்று ஊட்டியஆறுதலான நன்மதியை அநுட்டித்த எவரேனும் பின் சஞ்சலப்படச் சம்பவித்ததேயில்லை.

புற்று நோயால் (Cancer) மிகவருந்திய ஓர்ஸ்திரீ சஞ்சூசையப்பர் சிற்றாலயத்துக்குவந்தாள். அந்திரேபிறதர் "நீ சுகப்பட்டிருக்கிறாய்" என்று உறுதிவாக்கருளினார். அவளுடைய சத்திரவைத்தியர் "இப்புதுமையைச் சற்றும் நம்பேன்" என மறுத்து, வெட்டிவைத்தியஞ்செய்யவேண்டிய முஸ்திப்புப்பண்ணிக்கொண்டு புற்றுநோய் இருந்தஇடத்தைப் பார்த்தார். உற்றுஉற்றுப் பார்த்தென்ன? அது இருந்தஇடமே தெரியாதவகையாய் மாறிமறைந்துபோய்விட்டதைக்கண்டு மலைக்கலானார்.

(தொடரும்)

# அங்கும் இங்கும்

## தொழிலும் உயர்வு தாழ்வும்

"எந்தத்தொழிலையும் இழிவாகக் கருதும் கீழ்த்தரமான எண்ணம் ஒழிந்து, தொழிலில் உயர்வுதாழ்வு இல்லையென்னும்பண்பு நம்மிடையே உதயமாகவேண்டும். அதுதான் நம்மையும், நமது சந்ததியையும் தொடர்ந்து சுபீட்சவாழ்வுக்கு அழைத்துச்செல்லும்."

திரு. எஸ். யு. சோமசேகரம்,
வடபெரும்பாகக் கல்விஅதிகாரி

## ஆங்கிலத்தின் முக்கியம்

"இன்னும் 15 வருடங்களுக்குச் சர்வகலாசாலையின் போதனமொழி ஆங்கிலமாகவே இருக்கும். ஆதலால், ஆங்கிலம் கற்பிப்பதில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். நாட்டின் தேசிய மொழிகளைப் பயில்வது மிகவும் அவசியமே. ஆயினும், பொருளாதாரத் துறையிலே நாட்டில் ஸ்திரமானநிலைமையை உண்டுபண்ணுவதற்குத் தேசியமொழிகளைமட்டுமே பயில்வதால் பயன்ஏற்படாது."

சேர் நிக்கலஸ் அற்றிக்கலே,
இலங்கைச்சர்வகலாசாலை உபவேந்தர்

## சகோதரர் உணவுமந்திரி

"எனது சகோதரர் உணவுமந்திரி திரு. பிலிப் குணவர்த்தன எம். ஈ. பி. அரசாங்கத்தின் கைப்பொம்மையாகவும், பக்தக்காரராகவும் மாறியிருக்கின்றார். அவருக்கு யாதொருகொள்கையும் கிடையாது. அவர்மீது யாருமே நம்பிக்கைவைக்கவுமமுடியாது. உணவு மந்திரி என்றமுறையில் அவர் எவ்வளவோ வேலைகள்செய்ய வேண்டியிருக்கின்றார். அவரது பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் என்ன செய்திருக்கின்றன?"

திரு. ரூபேட் குணவர்த்தன,
கொட்டே எம். பி.

## பயங்கரமான சூழ்நிலை

"இன்று தமிழ்மக்கள் பயங்கரமான ஓர் சூழ்நிலையில் வாழ்கின்றனர். நிலைமை மோசமாகுமுன்னரே தகுந்த ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும். இன்று யாழ்ப்பாணத்தில் சனத்தொகை பெருகிவிட்டது. இவர்கள் அனைவருக்கும் தொழில் பெற்றுக் கொடுப்பது ஓர்பெரும்பிரச்சினையாகின்றது. மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திரிகோணமலை ஆகிய பகுதிகளில் எவ்வளவோநிலங்கள் பயனற்றுக் கிடக்கின்றன. இவைகளை அபிவிருத்திசெய்ய விவசாயிகள் வேண்டும். அப்பகுதிகளிலபோய்க் குடியேறி விவசாயத்தில் ஈடுபட்டால் பெரும்பயன் உண்டாகும்."

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்,
எம். பி.

## அவர் ஏமாந்துபோனார்

"ஸ்ரீலங்கா இராஜ்ய குருசங்கமய ஆசிரியசங்கத்திலே 16,000 ஆங்கில, சிங்கள, தமிழ் ஆசிரியர்கள் உள்ளனர். கல்விமந்திரி சிங்கள ஆசிரியர்களுக்காக மாத்திரம்போராட நமதுஆசிரியசங்கத்தை உபயோகிக்கவிரும்பினார். ஆனால், அவர்ஏமாந்துபோனார். சிங்கள—தமிழ் ஆசிரிய பேதமுண்டாக்கி நம்மைத் தமது கைப்பொம்மையாக்க விரும்பினார். நாம் அதை எதிர்த்தோம். உதவிபெறும் பாடசாலைகளின் ஆசிரியர்களும், அரசினர் பாடசாலைகளின் ஆசிரியர்களும் ஒன்றுசேர்ந்து ஓர் பிரமாண்டமான போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளோம். சாதி, மத, பொருளாதாரப் பிரச்சினைகளை ஆசிரியர்களாகிய நம்மால் நீக்கிவிடமுடியும்."

திரு. எல். ஆரியவன்ச,
ஸ்ரீலங்கா இராஜ்ய குருசங்கமய
பொதுச்செயலாளர்

## பிரதமரின் பெரும்பிரச்சினை

"இலங்கை அரசாங்கம் என்னும் இரதத்தை இழுத்துச்செல்லக்கூடிய நல்லகுதிரைகள் என்னிடம்இருக்கின்றன. தொந்தரவு என்னவென்றால், சிலகுதிரைகள் பொறுமையை இழந்து மற்றவைகளை உதைக்கத் தொடங்குகின்றன. சிலகுதிரைகள் வழியைவிட்டுப் பாய்ந்துவிடுகின்றன. சில பின்னிற்கின்றன இவைகளைக் கட்டுப்படுத்திக் கடிவாளத்தை இறுகப்பிடிப்பது எனக்குப் பெரும்பிரச்சினையாக இருக்கிறது."

பிரதமர் பண்டாரநாயகா

## தமிழ்மக்களின் கவலையீனம்

"கிழக்குமாகாணத்தில் அரசாங்கம் செய்துவரும் சதித் திட்டங்களையும், சூழ்ச்சிகளையும் நாம் சிந்தித்தால் இன்னும் சில காலங்களில் அது சிங்களப் பிரதேசமாக மாறிவிடுமா? அன்றேல் தமிழ்ப் பிரதேசமாகத்தான் இருக்குமா? என்பதற்குப் பதில்கூற முடியாமல் இருக்கிறது. அந்தமாகாணத்தில் எவ்வளவோ குடியேற்றத்திட்ட நிலங்கள் இருந்தும் தமிழ்மக்கள் அங்கு போய்க் குடியேறுவதில் கவலையீனமாயிருக்க, அவற்றைச் சிங்களமக்கள் சுவீகரித்துவிடுகிறார்கள்."

திரு. வி. என் நவரத்தினம்,
சாவகச்சேரி எம். பி.

## தமிழர் உரிமைகளுக்குத் தமிழரே

"தமிழ்ப்பேசும்மக்கள் தங்கள் விமோசனத்தைத் தாமாகவே பெற வேண்டும். இன்று எமக்குள்ளபிரச்சினைகளை எதிர்த்து மனஉறுதியுடன் போராடினால் இழந்தஉரிமைகளை நாம் பெறுவது திண்ணம். ஆனால், சிங்களக்கட்சிகளோடுசேர்ந்து நமதுஉரிமைகளுக்காக நாம் போராட முடியாது என்பதுதான் எனது அபிப்பிராயம். இது தமிழனின்பிரச்சினை. தமிழர்களே தீர்த்தாகவேண்டும். அயர்லாந்து தேசமக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடிய வரலாறு நமக்கு நல்லதோர் வழிகாட்டியாகவும், பாடமாகவும் அமைகிறதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்."

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்,
எம். பி.

## புத்தர்களும் உத்தியோக பதவிகளும்

"பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனறல் சம்பவம் ஓர் அபாயக்குறியாகத் தென்படுகிறது. சிங்களம்மட்டும் சட்டம் சனப்பிரதிநிதிகள்சபையில் விவாதிக்கப்பட்டபொழுது தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், சமசமாஜகட்சித்தலைவர் டக்டர் என். எம். பெரேராவும் ஒரு எச்சரிக்கை விடுத்தனர். மொழிப் பிரச்சினையாக ஆரம்பித்த இப்போராட்டம் இனப் பிரச்சினையாகவும், மதப்பிரச்சினையாகவும் வளர்ந்து சாதிப்பிரச்சினையாகக் கடைசியில் முடிவடையும் என்பதே அந்தஎச்சரிக்கை. இப்பொழுது வகுப்புவாதம் மதப் போராட்டமாக உருமாறி வருவதைத்தான் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனறலின் விவகாரம் காட்டுகின்றது. சிலகாலமாகச் சிங்கள புத்தர்களுக்குத்தான் முக்கிய உத்தியோகபதவிகள் கொடுக்கப்படவேண்டுமென்றகோஷம் அரசியல் வானில் ஒலித்துக்கொண்டிருந்தது. புத்தர்ஒருவரே பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனறலாக இருக்கமுடியும் என்பதை ஏற்றுக்கொள்வதன்மூலம் அக்கோஷத்திற்கு அதிகாரபூர்வமான அங்கீகாரத்தை அளித்துவிட்டார்பிரதமர். இதையிட்டுத்தான் சிறுபான்மை மக்கள் கவலைகொள்ள வேண்டியிருக்கிறது."

இலங்கேஸ்வரன்

## கற்றவாலிபரும் கோழிப்பண்ணையும்

"பரீட்சையில் சித்தியடைந்த 12 வாலிபர்கள் 'லோங்ஸ்' போட்டுக் கொண்டு கிளிநொச்சிப் பகுதியில் கோழிப்பண்ணை வைத்து நடாத்துவதை நான் நேரேசென்றுபார்த்து அளவிலா ஆனந்தங்கொண்டேன். அரசாங்க உத்தியோகஸ்தர்தான் காற்சட்டை போடலாம் என்று நினைப்பது மடமை. கமக்காரரும் காற்சட்டை போடலாம். மனைவியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு கார்ஓட்டிச் செல்லலாம். கமத்தொழில் மூலம் அதிக பொருள் சம்பாதிக்கும் வாலிபர்களுக்கே நாங்கள் எங்கள் பெண்களைக் கொடுப்போமென்று ஒவ்வொரு பெற்றோரும் பிரதிக்கினை செய்யவேண்டும். பெண்பிள்ளைகளைப் பெற்றெடுத்தவர்கள் காற்சட்டை உத்தியோகஸ்தரைத் தேடித்திரிந்த காலம் மலையேறிவிட்டது."

திரு. வி. என். நவரத்தினம்,
சாவகச்சேரி எம். பி.

## இளைஞர்களும் பொருளாதாரமும்

"எமது பொருளாதாரம் திருந்த வேண்டுமானால் அது இளைஞர்கள் மூலந்தான் முடியும். தனிய விவசாயத்தோடுநில்லாது கைத்தொழில்களிலும் ஈடுபடவேண்டும். இந்தியாவிலிருந்து இன்று ஐந்துலட்சம் ரூபாவுக்கு வெங்காயக்கூடுகள் தருவிக்கிறோம். எமது இளைஞர்கள் இங்குள்ள மூலப்பொருட்களைக் கொண்டு இக்கூடைகளைச் செய்வார்களானால் இந்த ஐந்துலட்சம்ரூபாவும் எம்மிடையே தங்கும். இதேபோல் செத்தல் மிளகாய், மற்றும்பயிர்களிலும் அதிக வருவாயை நாம் பெறக்கூடியதாய் இருக்கிறது. எல்லோரும் ஒரேதொழிலில் ஈடுபடாமல் வெவ்வேறு தொழில்களில் கவனஞ்செலுத்தினால் இன்னும் சொற்பகாலத்தில் எதிர்பாராத பொருளாதாரமுன்னேற்றத்தைக் காணலாம். ஆகவே, இளைஞர்கள் இன்றையநிலைமையில் எத்தொழிலையுஞ்செய்ய முன்வரவேண்டும். அதற்காக எவ்வித கஷ்டங்களையும் எதிர்நோக்க ஆயத்தமாகவேண்டும்."

திரு. எம். ஸ்ரீகந்தா,
யாழ்ப்பாண அரசாங்க அதிபர்

## மாக்ஸியவாதிகளின் நோக்கம் என்ன?

"ஓர் ஜனநாயக அரசாங்கத்தில் தீவிரவாதிகள் இருக்கும்வரை ஈராண், சூடான், பாகிஸ்தான் ஆகியநாடுகளைப் போல் சதா உள்நாட்டுக் கலகநிலைமையும், அமைதியின்மையும் இருந்து வரும். ஈற்றில், மீளமுடியாத படுபாதாளத்தில் இந்நாடு வீழ்ந்துவிடும். இரத்தஞ்சிந்தாமல் நமக்கு அரசியற் சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் கிடைத்தபிறகு சர்வாதிகாரத்தை நிலைநாட்ட ஏன் இரத்தஞ்சிந்தவேண்டும்? இலங்கையிலே மாக்ஸியவாதிகள் வெற்றிபெறுவார்களானால் 2500 வருடங்களாகப் பாதுகாக்கப்பட்டுவந்த நமது கலாசாரமும், பண்பாடும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிடும். அரசாங்கத்தோடு ஒத்துழைப்பது போல் காட்டிக்கொண்டு அதற்கு அபகீர்த்தியை உண்டுபண்ணி அதனைக் கவிழ்த்துவிட்டு அதிகாரத்தைப் பிடுங்கிக்கொள்வதுதான் மாக்ஸியவாதிகளின் நோக்கம். நாட்டை ஆளவேண்டுமானால் அவர்கள் மக்களிடமிருந்து அதிகாரம் பெறவேண்டும். ஜனநாயகரீதியில் அமைந்த இந்தவழியை விட்டுவிட்டுச் சமசமாஜிகள் கீழ்த்தரமான தந்திரங்களைக் கையாளுகிறார்கள்."

ஜனாப் சி. ஏ. எஸ். மரிக்கார்,
தபால் — வானொலி மந்திரி.

## நாலு சங்கதிகள்

● கம்யூனிஸ்தபிரசாரப் புத்தகங்களும், பிரசுரங்களும் மஸ்கோவிலிருந்து நேரடியாகக் கோலாலம்பூரி லுள்ள தனிப்பட்டபேர்களுக்கு அனுப்பப்பட்டு வருவது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதென்றும், மக்கள்இதுபற்றி எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமென்றும் மலேயாஅரசாங்கம் அறிவித்திருக்கிறது. மலேயாவில் கம்யூனிஸம் தடைசெய்யப்பட்டுள்ளதாகும்.

● ரோமானிய தகராறைத்தீர்த்து, வத்திக்கான் இராச்சியத்தின் சுயாதிபத்தியத்தை அங்கீகரித்தருளிய லத்தரன்உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடப்பெற்ற 30-வதுஆண்டுநிறைவின் ஞாபகார்த்தமாக ஓர்தபால்முத்திரையை இத்தாலியஅரசாங்கம் பாவனைக்கு விடுத்திருக்கின்றது. அவ்விதமே வத்திக்கானும் ஓர்ஞாபக தபால்முத்திரையைவிடுக்க ஆயத்தப்படுகின்றது.

● 1945-ம்ஆண்டுமுதல் கம்யூனிஸ்த அக்கிரமிப்புகளுக்குப்பலியான நான்கு கோடிக்குமேற்பட்ட மக்கள் "இராயாத்திரிகர்"ளாய்த் தங்கள்நாடுகள், வீடுவாசல்களை விட்டுப் பலவந்தமாக வெளியேற்றப்பட்டும், தப்பியோடியுமிருக்கிறார்கள். இவர்களில் வருடந்தோறும் ஒருலட்சம்பேர்வீதம் இதுவரை பன்னிரண்டரைலட்சம்பேர் அவுஸ்திரேலியாவில்போய்க் குடியேறியிருக்கின்றார்கள்.

● சென்னை இராச்சியத்திலுள்ள உயர்தரக்கல்லூரிகளிலே ஆங்கிலத்திற்குப்பதில் தமிழ்மூலம் கல்விபோதிப்பதற்கு 1960–61-ம்ஆண்டின் பாடசாலை வருடத்திலே ஓர்ஆரம்பம் செய்யப்படவிருக்கிறது. அப்போது அங்குள்ள ஓர்கல்லூரியில் இந்தப்போதனமொழி மாற்றதிட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதற்குத்தேவையான சகலஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்படும். பின்னர் 1964-ம் ஆண்டுமுதல் சென்னை இராச்சியத்திலுள்ள எல்லாக்கல்லூரிகளிலும் பி. ஏ. வகுப்புதமிழ்மூலம் படிப்பிக்கப்படும்.

● பூமியில்வாழும் மனிதனுக்கும், மற்றோர்கிரகமான சுக்கிரனுக்குமிடையே முதன்முதலாகத் தொடர்புஏற்பட்டுவிட்டதாக அமெரிக்க செய்தி ஒன்று அறிவித்திருக்கிறது. அங்கே வெஸ்ற்போட் எனுமிடத்திலிருந்து அனுப்பப்பட்ட ருடர்சமிக்ஞைகள் சுக்கிரனைச் சென்றுதாக்கி அங்கிருந்து பிரதிபலித்து மீண்டும்பூமிக்கே வந்துவிட்டதாக அமெரிக்கவிஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். இந்தச்சமிக்ஞைகள் பூமியிலிருந்து அங்குசென்றுதிரும்புவதற்கு நடத்திய பிரயாணதூரம் 5கோடியே 60 லட்சம் மைலெனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது.

---

## உரிமை தமிழர்களுக்கும் உண்டு

"இந்நாட்டில் சிங்களவர் மாத்திரம் வாழ்கிறார்கள்; நீதியும், நியாயமுமான அரசாங்கம் நடைபெறுகிறது என்ற முறையில் அரசாங்கம் இதுவரைகாலமும் உலகிற்குக் காட்டியது. ஆனால், கடந்த ஆண்டுக் கலவரங்களால் உலகம் உண்மைநிலையை உணர்ந்துவிட்டது. இலங்கையில் தமிழ்ப்பேசும் இனம் ஒன்றுஉண்டு. அவ்வினத்தவர்களுக்கு அரசாங்கம் அநீதி விளைக்கிறது. அவ்வநீதிகளையெல்லாம் தமிழ்ப்பேசும்மக்கள் எதிர்க்கிறார்கள். அதன் பலனாகவே இக்கலகம் என்றஉண்மை உலகினுக்கு விளங்கியது. உலக அரங்கில் சகல பத்திரிகைகளும் இந்நிலையைச் சுட்டிக்காட்டி உண்மையை வலியுறுத்தின. பிறப்புரிமைகளை வழங்காமல் பண்டா அரசாளமுடியாது. வீட்டுக் காவலும், சிறைத்தண்டனையும் பிரச்சினையைத் தீர்த்துவிடமாட்டா. இலங்கையிலே உரிமை சிங்களவர்களுக்கு மாத்திரமல்ல, தமிழர்களுக்கும் உண்டு என்பதைப் பலரும் உணரச்செய்தது அக்கலகங்கள்."

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்,
எம். பி.

# திபேத்திய லாமாவுக்குப் பாப்பரசர் பேட்டியளிக்கின்றார்

**ரோமையிலிருந்து ஓர்குருவானவர் எழுதியதின் பொழிப்பு :**

சென்ற பங்குனிமாதம் 21-ந் திகதியன்று பரிசுத்த பாப்பரசரின் பிரத்தியேக பேட்டி ஒன்றைப் பெறும் இணையற்ற சலாக்கியத்தைப் பெற்றுக்கொண்டோம். இதை ஓர் பெரும் கடாட்சமென்றே நாம் கருதுகிறோம். திபேத்திலிருந்துவந்த புத்தசமய லாமாஒருவர் பரிசுத்த பிதாவின் பிரத்தியேக பேட்டி ஒன்றைப் பெற்றுக்கொள்ளுமாறு திபேத்தியபாஷையில் எழுதப்பட்டதும், இத்தாலியபாஷை மொழிபெயர்ப்புடன் கூடியதுமான விண்ணப்பம் ஒன்றைச் செய்திருந்தார்.

பரிசுத்தபிதாவின் பிரத்தியேக படனசாலைக்கு வரும்படியாக நாம் அழைக்கப்பட்டபோது பிற்பகல் 12-35 மணி வேளையாயிருந்தது. லாமா பின்தொடர வண. சில்வானுஸ் சுவாமியார் முதலில் பிரவேசித்தார். றுபேட், வார்கி என்ற பிறதர்மார் லாமாவைப் பின்தொடர்ந்தனர். படனசாலையின் வாயிலை அடைந்ததும் ஏறக்குறைய மேற்றிராணிமாரின் திருமுடியையொத்ததான தம்முடைய தலைச்சீராவை லாமா அவர்கள் சிரசிலிருந்து கழற்றிவிட்டுக் கீழே முழந்தாட்படியிட்டுத் தம்முடைய சிரசு ஏறக்குறையத் தளத்திலே முட்டும்படியாகத் தாழ்ந்து வணங்கினர்.

23-ம் அருளப்ப பாப்பரசர் எம்மைவரவேற்பதற்காக வாயிற்கதவுவரையில் நேரே வந்தார். அதன்மேல் லாமா எழுந்தார். பின்பு நாம் பரிசுத்த பிதாவின் பிரத்தியேக படனசாலையில் பிரவேசித்தோம். அங்கே லாமா விசேஷ திபேத்தியகடுதாசியிலே திபேத்தில் அச்சிடப்பெற்ற திபேத்தியபாஷைச் செபப் புத்தகம்ஒன்றையும், ஓர் சீனக் கிண்ணத்தட்டிலே ஓர்இன மோதிரம் ஒன்றையும் அவருக்கு அன்பளிப்புச்செய்தார். இந்த மோதிரம் திபேத்திய தலாய் லாமாவால் எவருக்காவது வழங்கக்கூடிய அதிகம்உயர்ந்த கெளரவசின்னமாகும். இது தலாய் லாமா அப்போது கல்கத்தாவுக்கு விஜயஞ் செய்திருந்தபோது அவரால் இந்தலாமாவுக்குச் சன்மானிக்கப்பட்டதாகும். பரிசுத்தபிதா இந்த அன்பளிப்புகளைப் பரிவுடன் கையேற்று மேசைமீது வைத்தார்.

அதன்மேல் வண. சில்வானுஸ் சுவாமியார், "பரிசுத்தபிதாவே! இவர் திபேத்திலிருந்துவந்த ஓர் லாமா" என்று கூறினர். பரிசுத்தபிதா "ஆம், ஆம், வாருங்கள், வாருங்கள், நாம் சம்பாஷிப்போம்" என்று பதிலுரைத்தார். பாப்பரசர் நேரே படனசாலையின் மத்தியபகுதிக்குச்சென்றார். அங்கே அவரை நடுவிடமாகக் கொண்டு நாங்கள் வட்டாகரமாக அமர்ந்தோம். லாமா ஹிந்திப் பாஷையில் பேசினர். அப்பேச்சைப் பிறதர் றுபேட் அதிகாரபூர்வமாக மொழிபெயர்த்தார். "பரிசுத்த பிதாவாகிய தங்களுடன்பேசும் ஓர் சந்தர்ப்பத்தைப் பெற நான் நெடுநாள் ஆவல் கொண்டிருந்தேன்" என்று லாமா பேச்சை ஆரம்பித்தார்.

"தங்களைச் சந்திப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்; தாங்கள் கிறீஸ்துநாதரின் பதிலாளியாய் இருக்கின்றீர்கள்; யேசுக்கிறீஸ்து நாதரிலே நான் பெருமதிப்புக் கொண்டிருக்கிறேன்; கிறீஸ்துநாதர் உலகத்திற்குச் சமாதானத்தைப் போதிக்கவந்தார்; ஆனால், உலகம் இப்போது சமாதானத்தைக் கொண்டதாயில்லை; மக்கள் யுத்தங்களைப்பற்றியே பேசிக்கொள்ளுகிறார்கள்; யேசுக்கிறீஸ்துநாதருக்கு அத்துணை அதிகம்சமீபமாகப்பரிசுத்தபிதாவாகியதாங்கள் இருப்பதால் உலகம் சமாதானத்தைக் கொண்டிருக்கும்படியாய்த் தாங்களே அவரை மன்றாடவேண்டும்" என்றார் லாமா.

"ஆம், ஆம், உலகத்துக்காக மன்றாடுவது நமது கடமையாகும் .... இப்போது திபேத்தைப்பற்றி ஏதாவது நமக்குச் சொல்லுங்கள்" என்றார் பாப்பரசர். திபேத்து இப்போது சீனக்கம்யூனிஸ்தர்களாலே ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதுதவிர மற்றப்படி அது முன்போல அதேவிதமாகத்தான் இருக்கிறது" என்றார் லாமா.

அதன்மேல் பரிசுத்தபிதா திபேத்தையும், புத்தரையும், புத்தசமயத்தையும்பற்றி நாம் சிறுகவாசித்திருக்கிறோம் என்றார்.

பின்பு லாமா ஒருதொகையான பரிசுத்தபிதாவின் காட்டுகளைக்கொண்ட உறைஒன்றைத் தமது சட்டைப்பையிலிருந்து வெளியே இழுத்தெடுத்து, பாப்பரசரால் அவைகள் கையொப்பமிடப்பட வேண்டுமெனத் தனக்குள்ளவிருப்பைத் தெரிவித்தார். லாமா தமதுபேனையையும் எடுத்து அவர்கைச்சாத்திடுமாறு பாப்பரசரிடம் கொடுத்தார். பரிசுத்தபிதா சாலையின்மத்தியிலிருந்த ஓர் மேசையண்டை சென்று நின்றபடியே எல்லாக் காட்டுகளுக்கும் தமது கையொப்பமிட்டார்.

அப்போது மொன்சிஞ்ஞோர் ஒருவர் : "பரிசுத்த பிதாவே! தாங்கள் அதிகம்களைகொண்டிருக்கிறீர்கள்" என்றார். "ஆம், அது மெய்தான்; ஆனால், அதைப் பற்றிக்காரியமில்லை; பாவம், இந்த லாமா தமது அன்பளிப்புகளுடன் அத்துணைஅதிகம் தூரமான இடத்திலிருந்து வந்திருக்கின்றார்; அவருமே இரட்சிக்கப்படவேண்டிய ஓர் ஆன்மாவைக் கொண்டிருக்கிறார்" என்று பதிலளித்தார் பாப்பரசர். இவ்வாறு சொல்லிக்கொண்டு ஒருங்குசேர்ந்து ஓர்பிரதிமைப் படம் பிடிக்கலாமோ என்று எம்மைக்கேட்டார். ஏனெனில், இது அவருடைய திராத ஆசையாய் இருக்குமென்று அவர் உத்தேசித்தார். உடனே பிரதிமைப் படம்பிடிப்போர் அழைக்கப்பட்டனர். பரிசுத்தபிதாவை மத்தியாகக்கொண்டு கூட்டமாகப் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டது.

பின்னர் லாமாவின் விருப்பின் பேரிலே அவரையும்வைத்துப் பிரத்தியேகமாக ஓர்பிரதிமைப் படம் பிடிக்கப்பட்டது. அதன்மேல் பரிசுத்தபிதா மூன்றுபதக்கங்களை லாமாவுக்கு வழங்கினர். இந்தப்பேட்டியால் லாமாவுக்கு உண்டான சந்தோஷமோ வர்ணிக்கமுடியாததாய் இருந்தது. நாம்வெளிகொண்டபோது, "பாப்பரசரைத் தரிசித்ததை யிட்டு நான் எவ்வளவோ அதிகம் சந்தோஷப்படுகின்றேன்; பாப்பரசர் எவ்வளவுநல்லவராய் இருக்கிறார்; உள்ளபடியே எவ்வளவு அதிகம்நல்லவராய் இருக்கிறார்" என்று லாமா கூறலாயினர்.

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**பரிசுத்தவாரம் :**

பாடுகளால் நமதுபாவம்போக்கிப் பரலோகஇராச்சியத்தை நாம்அடைவதற்குச் சிலுவையின்பாதையைக் காட்டிய திவ்வியயேசுபெருமானின் திருப்பாடுகளைத் தியானிக்கும்பரிசுத்த வாரத்தை நமதுபங்கினர் பக்திச்சிறப்புடன் அனுட்டித்தனர்.

**குருத்துஞாயிறு :**

5-30மணியளவில் ஆலயமணிகளின் ஆர்ப்பரிப்பினிடையே வந்துகுழுமிய விசுவாசிகள் தங்கள்குருத்துகளைப் பெற்றுப் "பாத்திமாகிரி" மைதானத்தில்கூடினர். கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல. வம்பேக்சுவாமிகள் அங்கு வந்து அன்றைய திருச்சடங்குகளை ஆரம்பித்தனர். அதன்மேல் ஆசீர்வதிக்கப்பெற்றகுருத்துகளைக் காத்தேந்தி விசுவாசிகள் சுற்றுப்பிரகாரமாக முன்செல்ல, கட்டளைக்குரவரும் அலங்கரிக்கப்பெற்ற தமதுகுருத்தோலையைச் செங்கோலெனத் தாங்கிச்சென்று பங்குத்தேவாலயத்துள் பிரவேசஞ் செய்தனர். ஆங்கு திவ்வியபலிபூசை நிறைவேற்றிக் குருத்துஞாயிறுபற்றி ஓர்பிரசங்கம் செய்யப்பட்டது. குருத்துகளைப்பெறுதோர் 2-ம்பூசையின்பின் பெற்றுக்கொண்டனர். அன்றுபிற்பகல் வழமையான ஞாயிறுவார ஞானோபதேசவகுப்பு முடிந்ததும் ஆசீர்வதிக்கப்பெற்ற குருத்துகளால் அலங்கரிக்கப்பெற்ற பலிபீடத்தில் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. பரிசுத்த வாரத்தின் திங்கள், செவ்வாய், புதன் ஆகியநாட்களில் விசுவாசிகள்பெருந்திரளாகக்கூடித் திவ்வியபூசை கண்டு திருவிருந்தருந்திச் சிலுவைப்பாதை செய்து திருப்பாடுகளின்தியானத்தில் ஈடுபட்டனர்.

**பெரியவியாழன் :**

பிற்பகல்6மணி. எள்ளிடவிடமின்றி ஆலயத்தின் உள்ளும்புறமும் சனத்திரள் காட்சியளித்தது. திவ்வியபூசை தொடங்கிச் சுவிசேஷத்தின்பின் கட்டளைக்குரவர் பூசைஉடுப்பைக் களைந்து இடைக்கச்சையணிந்து, பன்னிருபாலியர்களின் பாதங்களைக் கழுவித் திவ்வியயேசு அன்று செய்ததை ஞாபகத்திற்குக் கொணர்ந்தார். தொடர்ந்துபூசை நடைபெற்றது. பெருந்திரளானோர் திருவிருந்தருந்திப் பாஸ்குக்கடமை தீர்த்தனர். பின்னர் வசீகரிக்கப்பெற்ற திவ்வியநற்கருணை உரியசடங்காசாரப்படி பூங்காவனமே போன்று அலங்கரிக்கப்பெற்றிருந்த புதியபீடத்துக்குச் சுற்றுப்பிரகாரமாக எடுத்துச்செல்லப்பெற்று ஆராதனைக்காக வைக்கப்பட்டது. அன்றிரவு சிறைப்படுத்தப்பெற்ற திவ்வியயேசு (பேழையில்வைக்கப்பட்ட வசீகரிக்கப்பெற்றதிவ்வியசற்பிரசாதம்)வுக்கு இடையறாது ஆராதனை, வணக்கவழிபாடு நடந்துகொண்டிருந்தது. பாவாலும், பூவாலும், தீபங்களாலும், இடையறாதசந்திப்புகள், செபங்களினாலும் பங்குக்கிறீஸ்தவர்களும், பக்திச்சபையினரும், பிறரும், அயற்பங்குக்கிறீஸ்தவர்களும் ஆறுதலளித்துக் கொண்டிருந்தனர். மணி 10. ஈசலெனத்திரண்டது சனக்கூட்டம். திருமணித்தியாலம் ஆரம்பமானது. ஆண்டவன் பால்இழுபடும் அருட்சக்தி பெற்றவர் போன்று புதியபீடத்தின்முன் மக்கள் காட்சியளித்தனர். மதுரை அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த வண. சி. எம். விசுவாசம்சுவாமியவர்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் தேவஅன்பு, தம்மையேதந்தார், நாம்செய்ய வேண்டியவை என்னும்தலைப்புகளின்கீழ் சிறந்த பிரசங்கங்கள்செய்து திருமணிநேரத்தைச் சிறப்பித்தார்.

**பெரியவெள்ளி :**

உலகுக்கென உயிர்நீத்த உத்தமர் யேசு மாணமடைந்ததினம். அன்று காலை ஆலயத்திற்கூடிய சனத்திரள் வெண்மை, கறுப்புமயமாகக் காட்சி தந்தது. வியாகுலபிரசங்கம், சிலுவைப்பாதை, சந்திப்பு என்பன முறையேநடந்தன. பிற்பகல்3 மணி. பங்குக்குரவரால் "ஸ்ராபாத்மார்த்தர்" சங்கீதம் பாடப்பெற்றது. தொடர்ந்து திருச்சிலுவை ஆராதனையும், வசீகரித்துவைக்கப்பெற்ற திவ்வியநற்கருணை புதியபீடத்திலிருந்து பழையபலிபீடத்துக்குச் சுற்றுப்பிரகாரமாக எடுத்துச் செல்லப்படல், திவ்வியபலிபூசை தொடர்ந்துநடைபெறல், திருவிருந்தருந்துதல் ஆகியனவும் நடைபெற்றன. பலிபீடமும் வெறுமையாக்கப்பட்டது.

**பெரியசனி :**

ஈஸ்றர்விழிப்பு. மாலை11மணிக்குப் பங்குக்கிறீஸ்தவர்கள் ஆலயமுன்றிலில் ஒன்றுகூடினர். கட்டளைக்குரவரால் அன்றையதின திருச்சடங்குகள் ஆரம்பிக்கப்பட்டன. புதிய நெருப்பு, பாஸ்குவர்த்தி ஆசீர்வதிப்பு, வெளிச்சுற்றுப்பிரகாரம், வர்த்தியின் பெருமைவாசிப்பு, பிரார்த்தனையின் முதற்பாகம், ஞானஸ்நானத்தண்ணீர் ஆசீர்வதித்தல், ஞானஸ்நானவார்த்தைப்பாடு புதுப்பித்தல், பிரார்த்தனையின் இரண்டாம்பாகம், நடுச்சாமப் பாடற்பூசை, ஈஸ்றர்பிரசங்கம் என்பன நிறைவேற்றிவைக்கப்பட்டன.

**உயிர்த்த ஞாயிறு :**

காலை 6மணிக்குப் பாட்டுப்பூசை பிரசங்கத்துடன் நிறைவேறியது. 7-30 மணியளவில் ஆயித்தியமலைச் சதாசகாயமாதா ஆலயத்தில் பங்குக்குரவர் பாடற்பூசைநிறைவேற்றிப் பிரசங்கஞ் செய்து, திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளினர். பிற்பகல் 4மணிக்கு ஞானோபதேசவகுப்பு, செபமாலை, பாட[illegible]டுப்பிரார்த்தனை, திவ்வியநற்கரு[illegible] ஆசீர்வாதத்துடன் பரிசுத்தவாரநிக[illegible]சிகள் இனிதேமுடிவடைந்தன. பெ[illegible] வெள்ளிக்கிழமையன்று பரிசுத்த தல[illegible]களுக்காகவும், (பலஸ்தீனா) உயிர்[illegible] ஞாயிறுப்பூசைகளில் மேற்றிராச[illegible] குருமடத்துக்காகவும் காணிக்கைகள் சேர்க்கப்பட்டன.

— நிருபர்

> "ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

கலைச்சோலையில் புதுமலர்கள்

பாலர்க்கு விருந்தூட்டும்

# பைந்தமிழ் நூல்கள்



தமிழ்ப் பயிற்சி
(2ஆம் வகுப்பு)
விலை சதம் 65

தமிழ்ப் பயிற்சி
(3ஆம் வகுப்பு)
விலை சதம் 90

அழகுப்பதிப்புக்கள்! அறிவுத்தொகுப்புக்கள்!!

- இனிமைபொதிந்த இலக்கணப் பயிற்சிகள்.
- இளஞ்சிறுவரை ஈர்க்கும் புதுமைகள்.
- இன்சுவைகனிந்த கவிதைகள்; கதைகள்.

கவிதைகள்; பாலர்களுக்கென இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டவை)

படங்கள்: விடுகவிகள்; பயிற்சிவிளையாட்டுக்கள் நிறைந்தவை.
பத்திரிகைகளும், பாடசாலைகளும் பாராட்டுகின்றன.

ஆசிரியர்கள்:

க. பே. முத்தையா — ம. விக்ரர்
(தமிழறிவு, கட்டுரைக்கதிர், சூழற் பயிற்சிகள் எழுதியோர்)

விற்பனையுரிமை:

புனித சூசைமாமுனிவர் புத்தகசாலை,
பெரியதெரு, — யாழ்ப்பாணம்.

வியாபாரிகளுக்கும், தொகையாக எடுப்போர்க்கும் விசேடகழிவு

## புதியகுருவரின் முதற்பூசை

வண. கே. ஏ. பிரான்சிஸ் மைக்கேல் சுவாமியவர்கள் தமதுஜனனபதியாகிய குளமங்கால், அர்ச். பிரான்சிஸ்சவேரியார் ஆலயத்தில் சென்ற 2-ந்திகதி வியாழக்கிழமைகாலை தமது முதலாவது பாடற்பூசையை நிறைவேற்றினர். இப்புதிய குருவர் சென்றமார்கழிமாதம் பூனாவிலுள்ள பரிசுத்தபாப்பரசர் குருமடத்தில் குருப்பட்டம்பெற்றுத் தமது கல்வியைமுடித்துச் சென்றபங்குனிமாதக்கடைசியில் யாழ்ப்பாணம் திரும்பினர்.

குளமங்கால் கட்டளைக்குருவர் வண. பி. ஏபிரகாம்சுவாமியவர்கள் பெரும் ஆடம்பரங்கள் மத்தியில் புதிய குருவரை வரவேற்றூர். திவ்வியபூசையின்போது வண. றெஜனட், வண. ஸ்டம்பதின் ஆகும் குருவர்கள் தியாக்கோனாகவும், உபதியாக்கோனாகவும் உதவிபுரிந்தனர். வண. பி. தியோகுப்பிள்ளை சுவாமியவர்கள் அரியமனவருட்சிக்குரிய பிரசங்கஞ்செய்தார். அநேககுருப்பிரசாதிகள் பூசையில் சமுகமாயிருந்தனர். கிராமவிசுவாசிகள் கோவிலிற்குழுமியிருந்தனர். புதியகுருவரின் தாயாருட் .. பாடகர்குழு பூசைப்பாக்களில் .. துகொண்டது.

..வ்வியபூசையின்பின் புதியகுருவர் ..வாத்தியங்கள்இசைக்க அழகாய்ச் ..காரித்திருந்தபாடசாலையில் அமைக்..பட்டிருந்தமேடைக்கு அழைத்துச் செல்லப்பெற்றுப் பூமாலைசூட்டப்பெற்றூர். வட்டாரமுப்புச்சுவாமியாராகிய அதிவண. கோமஸ்சுவாமியவர்களுக்கும், கட்டளைக்குருவர் வண. ஏபிரகாம் சுவாமியவர்களுக்கும் பூமாலைகள்சூட்டப்பெற்றுப் புதியகுருவருக்கு ஓர் அழகியசோபனபத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. பாடசாலைச் சிறுவர்சிறுமிகளால் இன்னிசைப்பாக்கள் படிக்கப்பட்டு ஓர்குருவானவருக்குரிய பூசைவஸ்திரங்களும் அன்பளிப்புச் செய்யப்பெற்றன.

புதியகுருவர் வண ஏபிரகாம்சுவாமியவர்களுக்கும், ஏனையோருக்கும், விசேஷமாய்ப் 15வருடங்களுக்குமுன் தமக்குக்கல்வியூட்டிய — அங்குசமுகமாயிருந்து தமக்குவரவேற்புஉபசாரணையளித்த அந்தப்பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. எஸ். ஜி. பரஞ்சோதியவர்களுக்கும் தமதுஆழ்ந்த தாழ்மையான நன்றிதெரிவித்தார்.

வண. ஏபிரகாம்சுவாமியவர்கள் தமதுஉரையில் அங்குசமுகமாயிருந்த புதிய குருவருக்குஅளித்த வரவேற்பு விழாவில் பங்குபற்றிய குருமாருக்கும், கிறீஸ்துவர்களுக்கும், கொண்டாட்டத்தை நிர்வகிக்க உதவிய யாவருக்கும் தமதுஇதயபூர்வமான நன்றியைத்தெரிவித்தார். இன்னும் அவர்தொடர்ந்து பேசுகையில், புதியகுருவானவர் கிறீஸ்துநாதரின் ஓர்பிரதிநிதியென்றும், அவரைச் சங்கிக்கும்போது கிறீஸ்துநாதருக்கே சங்கைசெலுத்துகிறேமென்றும் கூறினர்.

பிரசித்தகொண்டாட்டம் முடிந்ததும் புதியகுருவரின்தாயார் தனதுஏகபேருன் குருபுதல்வருக்குத் தாண்வசிக்கும் இல்லத்திலே ஒருவரவேற்புநடாத்தினு குருபுதல்வரே அங்கு குழுமியவர்களை வரவேற்றுபசரித்தார். அங்கு பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. பரஞ்சோதிஅவர்கள் புதிய குருவரின் சிரிய குணங்களைப்பாராட்டி ஓர்சிறு சொற்பொழிவாற்றி அவரைவாழ்த்தினர். திருவாளர்கள் டீ, ஜேம்ஸ், எம். அருளானந்தம் என்பவர்களும் உரையாற்றினர். சிற்றுண்டி, இனியபானம் முதலியன பரிமளிக்கலாயின. ஈற்றில் புதியகுருவரின் திருக்கர ஆசியுடன் கொண்டாட்டம் இனிதுமுடிவெய்தியது.

— நிருபர்

நோய்களின் விபரம்

நீரிழிவு, சன்னி, தொய்வு, இஸ்தேரியாவாய்வு, காசம், குன்மம், சயரசுவாதம், உருக்குநோய், புற்றுநோய், கெற்பச்சிதைவினுல் ஏற்படுமோகங்கள் முதலியவைகளுக்குச் சிகிச்சை பெற எம்மிடம் கலந்து ஆலோசியுங்கள்.

உங்கள் சுகவாழ்வே
எமது சேவையின் இலட்சியம்.



வண. தயட்டோசியஸ்,
மாஸ்கறேனஸ் சுவாமியவர்கள்

## நீர்கொழும்பு விஜயம்

தூத்துக்குடி மேற்றிராசனத்தைச் சேர்ந்த இழைவைப்பார், விளாத்திகுளம் பரலோகமாதா கோவில் பங்குக்குருவர் வண. எம். தயட்டோசியஸ் மாஸ்கறேனஸ் சுவாமியவர்கள் இலங்கையிலுள்ள தமதுபங்கினரையும், பிரபலகத்தோலிக்க தேவாலயங்களையும் தரிசிப்பதற்காக இம்மாதம் 8-ந்திகதி கொழும்புவந்து சேர்ந்துள்ளார். சுவாமியவர்கள் ஒருமாதம்வரை இலங்கையில் தங்கியிருப்பாரெனவும், தமிழ்ப்பகுதிகளிலே ஞாயிற்றுக்கிழமைகளில் பிரசங்கம் செய்வாரெனவும் அறிகின்றோம். சுவாமியவர்கள் தூத்துக்குடியைச் சேர்ந்த பிரசித்திபெற்ற தமிழ்பண்டிதரும், புலவருமான திரு. எம். பூரண மாஸ்கறேனஸ் அவர்களின் மூத்தபுதல்வரென்பது குறிப்பிடத்தக்கது.

சுவாமியவர்கள் 11-ந்திகதி சனிக்கிழமை நீர்கொழும்புக்கு விஜயம் செய்து 12-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை5மணிக்கும், 7-30 மணிக்கும் பெரியதெரு தேவமாதாகோவிலில் நிறைவேறிய இருதிவ்வியபூசைகளிலும் அரியபிரசங்கம்செய்தார். அன்றைய 'நல்லாயன்' என்னும்சுவிசேஷத்தைவிளக்கி, "நான் என் ஆடுகளை அறிவேன்." "என் ஆடுகள் என்னை அறியும்." "என்பிதா என்னைஅறிவதுபோல நானும்என் ஆடுகளை அறிவேன்" என்ற கருத்தமைத்து அரிய பிரசங்கம் தமிழில்நிகழ்த்தினர். நல்லாயனுகிய கிறீஸ்துபெருமான் தமக்குப்பதிலாக ஆயரின்தொழிலைத் தொடர்ந்துநடத்தப் பாப்பானவரையும்,மேற்றிராணிமாரையும், குருமார்முதலியோரையும் தந்திருக்கிறூரென்றும், நல்லமக்கைதக்கு ஒப்பானவகையில் சமுதாயம் தனது வாழ்க்கையைப் புனிதமானவகையில் அமைத்துக்கொள்ள வேண்டுமென்றும், நமக்குக்கிடைத்த ஆயர்களை நாம்அறிந்து, சிநேகித்து, அவர்களுக்குச் செவிகொடுத்தால் நமதுதனிப்பட்டவாழ்க்கையும் புனிதப்படும்என்றும் இறுதியாகச் சொல்லிமுடித்தார்.

சுவாமியவர்களின் வேத அறிவு, தமிழ்அறிவு, சொற்பொழிவு ஆற்றுவதிலுள்ள ஆற்றல்முதலியன அவர் அன்றுசெய்த அரியபிரசங்கத்திலிருந்துபுலப்பட்டது. அவர் நீர்கொழும்பில் தங்கிய இருதினங்களிலும் தூத்துக்குடி மேற்றிராசனத்தைச்சேர்ந்த கத்தோலிக்கமக்கள் அவரைச்சந்தித்துத் தங்கள்அன்பையும், பணிவையும் தெரிவித்துத் தங்கள்குருபக்தியைக் காட்டினூர்கள். அவர் நீர்கொழும்புக்கு விஜயம்செய்யக் காரணமாயிருந்தவர்கள் இங்குவசிக்கும் திரு. எல். பி. கொறேரு அவர்களும், குடும்பத்தினருமேஎன்பது எண்டுகுறிப்பிடத்தக்கது.

—நிருபர்.

AUCTION SALE

By virtue of the Authority to sell issued to me by the District Court of Jaffna in Insolvency Case No. 1, I shall sell by Public Auction at 10 a.m. on Saturday the 2nd May 1959 at No 1⅗, Power House Road, Grand Bazaar, Jaffna all the movables of Mr. P. M. Nagaratnam Chettiar, the Insolvent.

S. Ratnasabapathy,
Provisional Assignee.

No. 35, 4th Cross Street,
Jaffna, 6th April, 1959.

வேண்டுமா ?

சுவிசேஷப் பிரார்த்தனை

இது திருமணித்தியாலத்திற்குகந்தது. சுவிசேஷத்திலடங்கிய அரும்பெரும்வாக்கியங்களைத் தெரிந்தெடுத்துப் பிரார்த்தனைருபமாய்ச் சித்திரித்திருக்கிறது. அத்துடன் திருஇருதய — பரிகாரப் பிரார்த்தனைகளும், பிறைதிர்க்கும்மந்திரம், சென்னைச்சிலுவைப்பாதை, இன்னும் சிறுசெபங்களையும்கொண்ட 34 பக்கங்களையுடைய சிறுபுத்தகம்.

பிரதிவிலை சதம் 25.
தபாற்செலவு பிரத்தியேகம்

கிடைக்குமிடம்: S. J. யுவக்கிம்பிள்ளை,
டேவிற்வீதி, யாழ்ப்பாணம்.

5-ம்வருட

## மரண ஞாபகம்

பிறப்பு: 24-6-36



இறப்பு: 21-3-54

ஜெகநாதன் ஜேம்ஸ்

விக்ரர் இம்மனுவேல் ஜெயநாதன் ஜேம்ஸ் பரமபதமடைந்த 5-ம்வருடம் நிகழும் 21-4-59-ல் பூர்த்தியாகும். அத்தினத்தில் அவரின் ஆன்மசாந்திக்காகச் சில்லாலை, மரியதாய் ஆலயத்தில் ஓர் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இவரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுவோமாக.

சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

வித்லையாகியநான் ஒன்றரை வருடகாலமாகப் புற்றுநோயினுல் பீடிக்கப்பட்டு, இருமுறை சத்திரசிகிச்சைசெய்தும் குணமடையாது பரிசுத்தசதாசகாயமாதாவின்பேரில்வைத்த நம்பிக்கையினுல் மூன்றுமாதகாலத்தில் அற்புதமாகக் குணமடைந்தேன். இதை நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். அவர்நாமம் என்றென்றும் புகழப்படுவதாக.

காவற்காடு. உமது அடியாள்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 16-1959.